# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

கொங்கு மாமணி விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட சான்றோர்கள்

**2001 ஆம் ஆண்டு**

1. தெய்வத்திரு.கே.எம்.சென்னியப்பன்
2. டாக்டர். பழனி ஜி.பெரியசாமி
3. திரு. ஜெம். ஆர். வீரமணி

**2002 ஆம் ஆண்டு**

4. திரு. எஸ்.வி.பாலசுப்பிரமணியம்
5. திரு. ஆர்.காந்தி

**2003 ஆம் ஆண்டு**

6. திரு. டி.ஆர்.கார்த்திகேயன், I.P.S. (Retd.)
7. திருச்சி. ஆர். தேவராஜன்
8. திரு. ஜி.ஆர்.சுந்தரவடிவேல்

**2004 ஆம் ஆண்டு**

9. முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்
10. டாக்டர் சி.பழனிவேலு
11. டாக்டர். பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்

**2005 ஆம் ஆண்டு**

12. NSIT. திரு. எம்.முருகேசன்
13. திரு. கே.பழனியப்பன்
14. திரு.சி.கே.இராமசாமி

**2006 ஆம் ஆண்டு**

15. திரு.நல்ல கோவிந்தசாமி
16. சக்திமசாலா திரு.பி.சி.துரைசாமி
17. திரு. வி.கே.தங்கவேல்

"கொங்குமாமேதை விருது பெற்றவர்
அருட்செல்வர் டாக்டர். நா.மகாலிங்கம்


**2007 ஆம் ஆண்டு**

18. புலவர் செ.இராசு
19. திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி
20. பத்மஸ்ரீ டாக்டர். க.ரா.பழனிசாமி

**2008 ஆம் ஆண்டு**

21. ஆடிட்டர் மு.பாலசுப்பிரமணியம்
22. டாக்டர் என்.எம்.வீரய்யன்
23. தெய்வத்திரு. ப.செங்கோடன்

# கொங்கு மாமணி



## டாக்டர் வ.செ.நடராஜன்

**பக்தி மணம் கமழும் சிற்றூர் :**

பெரியார் மாவட்டம், அந்தியூர் அருகிலுள்ள சங்கராபாளையம் எனும் கிராமத்திலுள்ள வள்ளலார்புரம் என்பது ஒரு அழகிய சிற்றூர். பக்தி மணம் கமழும் சிற்றூரில் 06-10-1940 ஆம் ஆண்டு திரு.சென்னிமலைக்கவுண்டர், திருமதி இராமாயம்மாள் தம்பதியருக்கு மகனாக டாக்டர் நடராசன் பிறந்தார். அவருக்கு நான்கு சகோதரிகள்.

**ஆரம்பக் கல்வி :**

வள்ளலார்புரத்திலிருந்த திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். பின்னர் 5 கி.மீட்டர் தொலைவிலுள்ள அந்தியூரில் உள்ள போர்டு உயர்நிலைப்பள்ளியில் உயர்நிலை கல்வியைக் கற்று 1957 இல் காரைக்குடியில் உள்ள அழகப்பா கல்லூரியில் புகுமுக வகுப்பில் (பி.யூ.சி.) சேர்ந்து படித்தார்.

**மருத்துவக் கல்லூரி படிப்பு :**

1960 முதல் 1964 வரை மதுரை மருத்துவக்கல்லூரியில் படித்து டாக்டர் பட்டம் பெற்றார். சிறுநீரக டாக்டர். எம்.எஸ்.அமரேசன் மூலம் சென்னையில் டாக்டர் AL.அண்ணாமலை அவர்களிடம் 1968ல் (MD) பட்டமேற்படிப்பை முடித்தார். பட்டம் பெற்ற பின்னர், டாக்டர் AL. அண்ணாமலை அவர்களிடம் சென்னை அரசு பொது மருத்துவமனையில் ஐந்து ஆண்டுகள் உதவி மருத்துவராகப் பணியாற்றினார்.

**மண வாழ்க்கை :**

ஈரோடு தொழிலதிபர் திரு.டி.வேலப்பகவுண்டர், திருமதி பாவாத்தாள் அவர்களின் புதல்வி ஹம்சவேணியை 21-04-1969 ஆண்டு திருமணம் செய்து கொண்டார்.

தம்பதியருக்கு இரண்டு மகன்கள் மூத்த மகன் Dr.N.சுகுமார் இருதய அறுவைசிகிச்சை நிபுனர், இளைய மகன் N.சக்திவேல் அமெரிக்காவில் கணிப்பொறி நிபுனராக உள்ளார்.

**வாழ்வில் ஒரு திருப்புமுனை :**

டாக்டர் A.L.அண்ணாமலை அவர்களின் ஆலோசனைப்படி லண்டன் மாநகரத்தின் அருகிலுள்ள சௌத் ஆம்டன் என்னுமிடத்தில் பேராசிரியர் ஹால் அவர்களிடம் (1974-78) நான்கு ஆண்டுகள் பயிற்சி பெற்று MRCP பட்டம் பெற்று தாயகம் திரும்பினார்.

**முதியோர் மருத்துவப் பிரிவு ஆரம்பம் :**

பல இன்னல்களுக்கிடையில் 26-4-1978 ம் ஆண்டு சென்னை அரசுப்பொது மருத்துவமனையில் முதியோருக்காக புறநோய் மருத்துவப்பிரிவு ஒன்றைத் தொடங்கினார். சுமார் 10 ஆண்டுகள் அயராமல் உழைத்து, 1988 ம் ஆண்டு 10 படுக்கைகள் கொண்ட தனிப்பிரிவு ஒன்றை ஆரம்பித்தார். அச்சமயம் எடின்பரோவில் உள்ள Royal College of Physicians (FRCP) என்ற பட்டத்தை டாக்டருக்கு வழங்கி கௌரவித்தது.

முதியோர் மருத்துவத்தில் “M.D. Geriatrics” என்ற பட்ட மேற்படிப்பு 1996 ஆம் ஆண்டு சென்னை மருத்துவக்கல்லூரியில் இவர் முயற்சியால் தொடங்கப்பட்டது. இந்தியாவிலேயே இத்தகைய பட்ட மேற்படிப்பு வேறு எந்த மருத்துவக் கல்லூரியிலும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது அயரா உழைப்பாலும், திறமையாலும் முதியோர் மருத்துவம் என்னும் விதை துளிர்விடத் தொடங்கியது.

**நூல்கள் :**

முதுமையைப் பற்றி, தமிழிலும், ஆங்கிலத்திலுமாக சுமார் 20 நூல்கள் எழுதியுள்ளார். 1991 ஆம் ஆண்டு Nutrition for Better Health in Old age என்ற ஆங்கில நூலை வெளியிட்டார்.

தமிழ் நூல்களான “மீண்டும் வசந்தம், முதுமையிலும் இன்பம், கூடி வாழ்ந்தால் கோடி நன்மை, முதுமையில் மறதிக்கு குட்பை, முதுமை என்னும் பூங்காற்று, 60 வயதிற்கு பிறகு” மற்றும் ஆங்கில நூல்களான Mind your Mind., Geriatric Housecall Project, Primer on Geriatic Care, Healthy Nutrition for Healthy Ageing என்பவைகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

“முதுமையிலும் இன்பம்” எனும் நூலுக்கு 1990-ம் ஆண்டு “தமிழ் வளர்ச்சி துறையின்” சிறந்த நூலுக்கான பரிசை அப்பொழுதிருந்த முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களிடமிருந்து பெற்றார்.

அண்மையில் கேரளாவில் உள்ள ஆலப்புழையில் டாக்டரின் மருத்துவ நூல் ஒன்று மலையாளத்தில் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**விருதுகள்** :

உலக அளவிலும், தேசிய அளவிலும் மற்றும் மாநில அளவிலும் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

- முதியோர் மருத்துவத்தை முதன் முதல் நம் நாட்டில் ஆரம்பித்ததற்காக டாக்டர் B.C.ராய் தேசிய விருதை (1994) ஜனாதிபதியிடமிருந்து பெற்றார்.
- Indian Merchants Chamber Platinum Jubilee Endowment Trust Award from Mumbai என்ற விருதை 1994 ல் பெற்றார். அதில் கிடைத்த ரூபாய் ஐம்பதாயிரத்தையும் ஆதிபராசக்தி மருத்துவமனைக்கு நன்கொடையாகக் கொடுத்தார்.
- “இலண்டனில் உள்ள முதியோர் மருத்துவ சங்கம்” தனது பொன் விழா ஆண்டின் (The British Geritric Society’s 50th Anniversary Medal) தங்கப்பதக்கத்தை இவருக்கு 1997 ம் ஆண்டு லண்டனில் வழங்கி கௌரவித்துள்ளது.
- லூதியானாவில் உள்ள Nehru Sidhant Kendar Trust அவருக்கு “Sat Paul Mittal National Award” கொடுத்து கௌரவித்தது. அதில் கிடைத்த ஒரு லட்ச ரூபாயையும் ஆதிபராசக்தி மருத்துவமனைக்கே 1999ல் வழங்கினார்.
- தமிழ்நாடு டாக்டர் M.G.R.மருத்துவ பல்கலை கழகம் 2003 ம் ஆண்டில் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்து கௌரவித்துள்ளது.
- டெல்லியில் நடைபெற்ற தேசிய முதியோர் நல மாநாட்டில் “வாழ்நாள் சாதனையாளர் விருதை” மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் 2004 ம் ஆண்டு வழங்கினார்.
- தமிழ்நாடு அரசு இவருக்கு முதியோர்க்கு அளித்து வரும் சேவையைப்பாராட்டி “சிறந்த சமூக சேவகர்” விருதை தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு.க.அன்பழகன் அவர்கள் 2007 ம் ஆண்டில் வழங்கினார்.

**முதியோர்களுக்கு பெண் உதவியாளர்கள் பயிற்சி திட்டம்** :

"முதியவர்களை வீட்டிலேயே கவனித்துக்கொள்ள பெண் உதவியாளர்கள்" என்கிற டாக்டரின் திட்டத்தை **1993** ம் ஆண்டு, மேனாள் இந்திய நிதி அமைச்சர் திரு.சி.சுப்பிரமணியம அவர்கள் தொடங்கி வைத்தார். இதன் வாயிலாக ஏழைக் குடும்பத்திலுள்ள இளம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வழி செய்தார். இத்திட்டத்தை திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள் வெகுவாகப் பாராட்டினார். இன்றும் "சினேக தீபம்" மற்றும் சிராக் (Ceyrac) என்ற தொண்டு நிறுவனங்களின் மூலம் இப்பயிற்சித் திட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகிறார்.

**மூத்த குடிமக்கள் மன்றம் :**

**1997**ம் ஆண்டு அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு என்பது உத்தியோகத்திற்குத் தானே அன்றி உழைப்பிற்கில்லை என்ற நிலையில், பொது நலத் தொண்டில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு "மூத்த குடிமக்கள் மன்றத்திற்கு" **2001** ம் ஆண்டுமுதல் தலைவராக பொறுப்பு ஏற்று அரிய பல சாதனைகளை செய்து வருகிறார்.

**தேசீய மற்றும் உலகளாவிய கருத்தரங்கம் :**

சிங்கப்பூர், ஹாங்காங், ஹங்கேரி போன்ற வெளிநாடுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியுள்ளார். "புடாபெஸ்ட்" நகரத்தில், உள்ள ஓர் முதியோர் இல்லத்திற்குச் சென்று மூதாட்டிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

**ஆன்மீகமும் தொண்டும்** :

**1978**ம் ஆண்டு முதல் மேல்மருவத்தூரிலுள்ள சித்தர்பீடத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். அருள் திரு அடிகளார் அவர்களின் ஆசி பெற்றார். இந்த பக்தி மார்க்கத்தோடு தொண்டையும் இணைத்துக்கொண்டு மேல்மருவத்தூரிலுள்ள ஆதிபராசக்தி மருத்துவமனைக்கு வாரம் ஒரு முறை சென்று அப்பகுதி கிராம மக்களுக்கு இலவச மருத்துவ சேவை செய்து வருகிறார்.

இதன் மூலம் அனைத்து முதியோருக்கும் தங்க இடம் கொடுத்து தண்ணிய நிழல் தந்து வந்த இந்த "முதியோர் மருத்துவம்" என்ற ஆலமரம் கிராமப் பகுதிகளிலும் தன்னுடைய விழுதுகளைப் பரப்பி, பல முகாம்கள் நடத்தி சுகாதாரக் கல்வியும் விழிப்புணர்ச்சியும் வளர உதவியது.

இவர் ஆன்மீகம் சார்ந்த நூல்களையும் எழுதி உள்ளார். "AMMA" என்ற ஆங்கில நூல் மற்றும் அன்னை "அருளிய அற்புத மருந்துகள்" (ஆங்கிலம், தெலுங்கு, கன்னட மொழிகளிலும் வெளியாகியுள்ளது) என்னும் நூல்களாகும். "அன்னை அருளிய வேள்வி முறைகள்" என்ற நூலைப் பதிப்பித்துள்ளார்.

**தேசிய முதியோர் நல மையம் :**

இவருடைய அயராத முயற்சியின் பயனாக விரைவில் "தேசிய முதியோர் நல மையம்" என்ற ஒரு அமைப்பை, மத்திய மற்றும் மாநில அரசுகள் சுமார் 160 கோடி செலவில் முதியோர் மருத்துவத்தின் பிறப்பிடமான சென்னையில் துவங்க உள்ளது.

சுமார் 30 வருடங்களுக்கு முன்பு (1978) சென்னை அரசு பொது மருத்துவமனையில் முதியோர் மருத்துவம் என்ற ஒரு விதை விதைக்கப்பட்டு ஒரு செடியாகி, மரமாக வளர்ந்து கிளைகளைப் பரப்பி, விழுதுகளை வேருன்றச் செய்து எண்ணற்ற முதியவர்களுக்கு மருத்துவ உதவி எனும் குளிர் நிழலைத் தந்து வருவது மனதை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்கிறது.

**முதியோர் மருத்துவத்தின் தந்தை :**

முதியோர் நல மருத்துவத்தில் பல மைல் கற்களை கடந்து, அரிய பெரிய சாதனைகளை நிகழ்த்திக்காட்டி, அகில இந்தியாவிற்கும் இத்துறையின் சிறந்த வழிகாட்டியாய் திகழும், நமது டாக்டர் வ.செ.நடராசன் அவர்களை "முதியோர் மருத்துவத்தின் தந்தை" என்று பெருமைப்படப் போற்றி புகழ்ந்துரைப்பது சாலப்பொருத்தமான ஒன்றாகும்.

பெருமகனாருக்கு சென்னைக் கொங்கு நண்பர்கள் சங்கம் 2009 ஆம் ஆண்டின் "கொங்குமாமணி" விருதை வழங்கிப்பாராட்டி, வணக்கங்கங்களையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பித்து பெருமகிழ்ச்சி அடைகிறது.

❖❖❖❖❖

# கொங்கு மாமணி



## சொல்லேர் உழவன் கு.செல்லமுத்து

இவர் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கப்பல்பட்டி கிராமத்தில் குப்பண கவுண்டர்,கரும்பாயம்மாள் ஆகியோருக்கு 29-12-1945 ல் பிறந்தார்.

எட்டாம் வகுப்புவரை கல்வி கற்ற இவர் விவசாயம் மற்றும் சமூகப்பணியில் கொண்ட ஆர்வத்தால் தனது 25வது வயதில் 1970 ம் ஆண்டு ஊராட்சி மன்றத் தலைவராக தேர்வு பெற்று 7 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றினார்.

1972 ம் ஆண்டு ஐயா நாராயணசாமி நாயுடு அவர்கள் கோவையில் விவசாயிகள் சங்கம் ஆரம்பித்தபோது அவரோடு இணைந்து அதே ஆண்டு நடந்த போராட்டத்தில் கலந்து 70 நாட்கள் சிறையில் இருந்துள்ளார். அதன்பின் இன்றுவரை தொடர்ந்து விவசாயிகளின் நலனுக்கான பணியாற்றி வருகிறார். மின்துண்டிப்பு, ஜப்தி போன்ற நடவடிக்கைகளை தடுக்க போராடி 18 முறை சிறை சென்றுள்ளார்.

விவசாய இயக்கத்தின் சார்பில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, இரண்டு முறை வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்து, உழவர்களின் கோரிக்கைகளை சட்டமன்றத்தில் ஒலிக்கச் செய்த பெருமை பெற்றவர். இவரும் அதே இயக்கத்தின் சார்பில் மூன்று முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார்.

பாரதப் பிரதமர்கள் இந்திராகாந்தி, வாஜ்பேய், ராஜீவ் காந்தி, நரசிம்மராவ், தற்போதைய பிரதமர் மாண்புமிகு மன்மோகன் சிங் போன்ற தலைவர்களை விவசாய சங்கப் பிரதிநிதிகளுடன் நேரில் சென்று சந்தித்து கோரிக்கைகளை வலியுறுத்தியவர்.

தமிழக முதல்வர்களான புரட்சித்தலைவர் MGR, செல்வி ஜெயலலிதா, தற்போதைய முதல்வர் டாக்டர் கலைஞர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு போராடியும் வாதாடியும் பல விவசாய சலுகைகள் பெற்றுள்ளார்.

விவசாயிகளின் பிரச்சனைகளை மையமாகக்கொண்டு "ஏர்முனை" என்ற பெயரில் திரைப்படம் தயாரித்து வெளியிட்டு மத்திய அரசின் விருது கிடைக்கப்பெற்றார். இதில் கலைப்பணியும் ஆற்றியுள்ளார்.

ஐயா நாராயணசாமி அவர்கள் பாளையன்கோட்டை சிறையில் இருந்தபோது தாராபுரத்தில் மாபெரும் பொதுக்கூட்டத்தை தனி ஒரு நபராக முன்நின்று நடத்தி அவரின் விடுதலைக்கு வித்திட்டவர்.

தாராபுரம் தூரம்குடி கிராமத்தில் நிலவரி பாக்கிக்காக பசுமாடுகளை ஜப்தி செய்து கொண்டு சென்ற போது, விவசாயிகளுடன் சென்று மறியல் செய்ததால் மாட்டுடன் இவரை தாராபுரம் கிளைச்சிறையில் அடைத்தனர். இதைஅறிந்ததும் அமராவதி ஆற்றங்கரையில் 10,000 க்கும் மேல் விவசாயிகள் கூடிவிட்டனர், உடனே இவரை விடுதலை செய்ய அப்போதைய முதல்வர் MGR உத்தரவிட்டார்.

பாரதிய கிஸான் யூனியன் தலைவர் மகேந்திர சிங் திகாபத் அவர்களுடன் தொடர்பு கொண்டு அகில இந்திய அளவில் விவசாய சங்கத்தின் தொடர்புகள் ஏற்பட்டதால் உத்திரப்பிரதேசம், பஞ்சாப் அரியானா, குஜராத், போன்ற மாநிலங்களுக்குச் சென்று கூட்டங்களில் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு குரல்கொடுத்தவர்.

கர்நாடக மாநில விவசாயிகள் சங்கத்தலைவர், அமரர் பேராசிரியர் நஞ்சுண்டசாமி அவர்களுடன் தொடர்பு கொண்டு அவரை தமிழகம் அழைத்து வந்து 2002ம் ஆண்டு கள் இறக்கி விற்பனை செய்வது பற்றி மாபெரும் மாநாட்டை நடத்தினார்.

மகேந்திர சிங் திகாபத், வெங்கையா நாயுடு, ரங்கராஜன் குமாரமங்கலம் போன்ற தலைவர்களை அழைத்து விவசாயிகளின் மாநாடுகளை நடத்தினார். முதல்வர் கலைஞர் அவர்களையும் விவசாயிகள் மாநாட்டிற்கு அழைத்து மேடையிலேயே பல கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளார்.

பேராசிரியர் நஞ்சுண்டசுவாமி அவர்களின் தொடர்பால் உலக விவசாயிகள் அமைப்பில் பங்கு கொண்டு WTO ல் விவசாயத்தொழிலை சேர்க்கக் கூடாது என நடைபெற்ற உலக விவசாயிகள் மாநாடுகளில் ஜோகன்ஸ்பார்க், மொஸாம்பிக், மெக்சிகோ போன்ற நகரங்களில் கலந்து கொண்டுள்ளார்.

இலவச மின்சாரம் காப்பதற்கும், விவசாய கடன் நிவாரணம் பெறுவதற்கும் முதல்வரோடு தொடர்பு கொண்டு கோரிக்கைகளை நிறைவேற்ற பணியாற்றியுள்ளார்.

விவசாய சங்கக் கூட்டங்களில் இவரின் இயல்பான பேச்சு அனைத்து மக்களையும் சிந்திக்க வைப்பதாக அமைந்திருந்தது. இவரது பேச்சைக் கேட்க மாட்டு வண்டியைக் கட்டிக்கொண்டு பல மைல் தூரம் செல்வர் விவசாயப் பெருமக்கள்

முத்தாய்ப்பாக இவர் கிராமங்களில் ஆற்றிய எழுச்சியுரையால் கிராமப்புற மக்களின் அச்சம், அறியாமை, போட்டி, பொறாமை, ஆகியவற்றை போக்கியதுடன், “செல்லமுத்து சொன்னதைப் போல'' என்ற சொல் ஆதிக்கத்தையே ஏற்படுத்தியதால் “சொல்லேர் உழவன்'' என மக்களால் போற்றப்படுபவர்.

திரு. செல்லமுத்து அவர்கள் தமிழக அரசின் என்கோபெட் சேர்மனாக ஓராண்டு காலமும், உப்புவாரியத் தலைவராக ஓராண்டு காலமும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

தற்போது தமிழ்நாடு அரசின் விவசாய தொழிலாளர் நலவாரிய இணைத்தலைவராகவும், மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியக்குழு உறுப்பினராகவும், மத்திய அரசின் தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார்.

கடந்து **39** ஆண்டு காலமாக எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் விவசாயத் தொழிலும் விவசாயிககளும் வாழ வேண்டும் என்பதற்காகவும், சமுதாயம் விழிப்புணர்வு அடைய வேண்டும் என்பதற்காகவும் தொடர்ந்து கருத்துக்களை பரப்பிவரும் “சொல்லேர் உழவன்'' கு.செல்லமுத்து அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 2009ஆம் ஆண்டின் “கொங்கு மாமணி” விருதை வழங்கிப்பாராட்டி வணக்கங்களையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பித்து பெருமகிழ்ச்சி அடைகிறது.

❖❖❖❖❖

# கொங்கு மாமணி



## A. சக்திவேல்

பொள்ளாச்சி, செட்டிகாபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு.சி.எஸ்.ஆறுமுகம் - திருமதி பழனியம்மாள் தம்பதியருக்கு 1948 ஆம் ஆண்டு மூத்த மகனாகப் பிறந்தவர். தந்தை திரு.சி.எஸ்.ஆறுமுகம் சிறந்த நேர்மையான, கண்டிப்பான காவல் துறை அதிகாரியாக பணிபுரிந்தவர்.கோவையில் தன் பள்ளிப் படிப்பையும், பின் Auto Mobile துறையில் உயர்கல்வியையும் பயின்றார். 1981 ஆம் ஆண்டு திருமதி செல்வீஸ்வரி அவர்களை மணமுடித்தார். தம்பதியருக்கு காளீஸ்வர விக்னேஷ் என்ற ஒரு மகன் உள்ளார்.

பள்ளி, கல்லூரிப் படிப்பை முடித்து தொழில் தொடங்கும் போது திரு. சக்திவேல் அவர்கள் “வெற்றி அடைபவர்கள் வெற்றி அடைவதற்குக் காரணம்”, அவர்கள் செய்யும் அனைத்து செயல்களிலும் வெற்றியைப் பற்றி மற்றுமே சிந்திப்பார்கள்” (Successufl People become successful, because they acquire the habit of thinking everthing interms of Success) என்ற தாரக மந்திரத்தை தன் வெற்றிக் கொள்கையாக எடுத்துக்கொண்டார்.

அன்னார் அவர்களது சாதனைகள், வெற்றிகள் ஆகியவற்றைப் பார்த்தாலே, மேற்படியான ஒரு ஆணித்தரமான கொள்கை பிடித்தமும், அதற்கான முழுமுயற்சியும், ஆழ்ந்த சிந்தனையும், இடைவிடாத உழைப்புமே காரணமாக இருக்க முடியும் என்பது நமக்குப் புரியும்.

தொழில் சார்ந்தவர்கள் தொழிலில் வெற்றி பெறுவது அவர்களது உழைப்பைப் பொறுத்தது. ஆனால் தான் சார்ந்த தொழிலில் மட்டுமல்லாமல் அதைச் சார்ந்த பல அமைப்புகளிலும் தலைவர்மற்றும் பொறுப்புள்ள உயர்பதவிகளை அடைந்தது மட்டுமல்லாது அந்த அமைப்புகளின் பெருவளர்ச்சிக்கு வித்திட்டு ஒரு முத்திரையை பதித்து மிகப் பெரிய சாதனைகளைப் புரிந்துள்ளார்.

**1985** ஆம் ஆண்டு சுமார் **15** கோடி ரூபாய் அளவில் இருந்த திருப்பூர் பகுதியின் ஏற்றுமதிப் பொருளாதாரம், இன்று சுமார் **11,000** கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. அந்த துறையில் இந்த பெருவளர்ச்சிக்கு திரு. சக்திவேல் அவர்களது தொழில் திறமை, தொழில் மேலாண்மை, தனது எண்ணங்களை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறி அவர்களையும் தன்னுடன் இணைத்துக்கொண்டு செயல்பட வைக்கின்ற உன்னதமான திறமை ஆகிய உயர்ந்த கொள்கைகளால் தான் முடிந்தது என்பது உறுதி. அவரது சொந்த நிறுவனமான Poppys Garments ன் ஆண்டு வருமானம் மட்டுமே ரூபாய் **260** கோடியாகும்.

திரு.சக்திவேல் அவர்கள் கீழ்க்கண்ட பல முக்கிய அமைப்புகள் உருவாவதற்கும், அதன் வளர்ச்சியிலும் மிகப்பெரிய பங்காற்றியுள்ளார்.

Tirupur Exporters Association (TEA)
Tirupur Export Knitwear Industrial Complex (TEKIC)
Inland Container Deport (ICD)
Tea Public School
New Tirupur Area Development Corporation Limited (NTADCL)
Nift-Tea Fashion Knitwear Institute
India Knit Fair Association (IKFA)
Netaji Apparel Park (NAP)
Textile Eco Solutions Tamilnadu Limited (TEST)

திருப்பூருக்கு அருகில் உருவாகியுள்ள Nethaji Apparel Park (இந்தியாவில் முதல் ஜவுளிப் பூங்கா) இவரது கனவு நனவாகிய முக்கியத் திட்டங்களின் வைர மகுடம் என்றே சொல்ல வேண்டும். சமீப காலத்தில் Textile Eco Solutions Tamil Nadu Limited (TEST) என்ற ஒரு இயற்கை சூழல் வளர்ச்சிக்கும் திட்டத்தை மேற்கொண்டுள்ளார்.

ஜவுளி ஏற்றுமதி அமைப்பு (Apparel Export Promotion Commity) AEPL இன் தலைவராக இரண்டுமுறை மற்றும் செயற்குழு உறுப்பினராக கடந்த **24** ஆண்டுகளாக தன் பணிகளை செம்மையே செய்து வருகின்றார்.

மத்திய அரசின் ஜவுளித்துறை, நிதித்துறை மற்றும் வணிகத்துறை ஆகிய துறைகளில் கொள்கை முடிவுகள் எடுப்பதற்கு இவர் பங்களிப்பு பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

ஆயத்த ஆடை தயாரிப்பிற்கு வேண்டிய வடிவமைப்பு மற்றும் பயிற்சி வளர்ச்சிக்கு பெரும் பங்கு ஆற்றியுள்ளார்கள். UCO வங்கியின் இயக்குனர் குழுவில் முன்னாள்

உறுப்பினர், தற்பொழுது IDBI ன் இயக்குனர் என்று வங்கித் துறையிலும் தனது பங்களிப்பைத் தந்துள்ளார்.

தேசிய பேஷன் டெக்னாலஜி மையத்தின் (NIFT) வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகித்துள்ளார். சர்வதேச தொழில் மையத்தின் அழைப்பினை ஏற்று சுவிட்சர்லாந்து, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் முக்கியமான கூட்டங்களில் கலந்து கொண்டு வளர்ந்து வரும் நாட்டின் தன் தொழில் அனுபவங்களை பகிர்ந்து கொண்டுள்ளார். வளர்ந்த, வளரும் நாடுகளின் பங்களிப்பை மிகவும் அருமையாக எடுத்துரைத்து தனது அனுபவம் மூலம் வழிகாட்டியாக பெயர் எடுத்துள்ளார்.

2007 ஆம் ஆண்டு பாரதப் பிரதமர் மாண்புமிகு. டாக்டர். மன்மோகன்சிங் அவர்கள் தலைமையில் இங்கிலாந்து, பின்லாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்ற மத்திய அரசின் தொழில் கூட்டமைப்பின் உறுப்பினராகப் பங்கேற்றார். பல நாடுகளுக்கு அமைச்சர்களுடன் தொழில்முறைப் பயணமாக அரசாங்க சார்பில் சென்று பணியாற்றி உள்ளார்.

இவர் தலைமைப் பொறுப்பேற்றிருந்த பொழுது Tiruppur Export Association (TEA) சர்வதேச அரங்கில் ஒரு பெரிய அங்கீகாரம் பெற்ற அமைப்பாக முன்னேறியது என்பது வரலாற்று உண்மை. இப்படி தான் சார்ந்த தொழில், அதைச் சார்ந்த அமைப்புகள், அரசாங்க அமைப்புகள் என்று தான் மேற்கொண்டஅனைத்து செயல்பாடுகளிலும் ஒரு தனி முத்திரையை பதித்து உலகமே பார்த்து பாராட்டும்படியாக ஒரு நிலைமைக்கு அமைப்புகளை எடுத்துச்சென்ற பெருமை திரு. சக்திவேல் அவர்களைச் சாரும். இதுவல்ல என் சாதனை 2010 ஆம் ஆண்டு திருப்பூர் பகுதியில் ஏற்றுமதி 20,000 கோடியை எட்டவேண்டும் என்ற இலக்கை நோக்கி பயணிக்க வேண்டும் என்று உறுதி எடுத்து அதற்கான செயல்பாடுகளைச் செய்து வருவது நமது நாட்டிற்கு, நமது மாநிலத்திற்கு குறிப்பாக அவர் சார்ந்த நமது சமுதாய குடும்பத்திற்கு ஒரு பெருமை என்றால் அது மிகையாகாது.

திரு.சக்திவேல் அவர்களின் வெற்றிக்குக் காரணம் அயராத முயற்சி, முதிர்ந்த அறிவுக்கூர்மை, கூர்மையான எதிர்பார்ப்பு, தீர்க்கமான திட்டமிடல், தலைமைப் பதவிக்கு ஏற்ற குணாதிசியங்கள், நேர்மை, ஒழுக்கம், எளிமை, சமாதானப் படுத்திக்கொள்ள முடியாத தரம் போன்ற வெற்றிக்குத்தேவையான பண்புகளும் அதற்கேற்ற செயல்பாடுகளும் தான்.

கடுமையான உழைப்பு, தன் சக ஊழியர், தொழிலாளர்களிடம் வெற்றியடையத் தேவையான அன்பும், அரவணைப்பும் கலந்த கண்டிப்பு, எல்லாவற்றிலும் நேர்மை, இவைகள்

தான் நமது கொங்கு சொந்தம், திருப்பூர் தந்த மாணிக்க மகுடம், நமது இன்றைய போற்றுதலுக்குரிய மாமனிதர் திரு. ஏ.சக்திவேல் அவர்களின் மூலதனம்.

திரு. A.சக்திவேல் அவர்கள் பள்ளி நாட்களில் நல்ல மாணவராக, பெற்றோருக்குச் சிறந்த பிள்ளையாக, உற்றார் உறவினர்களுக்குச் சிறந்த உறவாக, குடும்பத்திற்கு சிறந்த தலைவராக, மனைவிக்கு சிறந்த கணவராக, மகனுக்கு சிறந்த தந்தையாக, சுயமாக தொழில் ஆரம்பித்து வெற்றிப் படிகளை கடந்து இன்றும் சிகரம் தொட்டுக்கொண்டிருக்கும் சிறந்த தொழில் அதிபராக, சிறந்த தொழில் உரிமையாளராக பல்வேறு தொழில், கல்வி, சமுதாயம் சார்ந்த அமைப்புகளில் தலைமைப் பொறுப்புகளை ஏற்று வெற்றி வீரராக திகழுகின்ற நிலைகளை எல்லாம் பாராட்டி ஒரே சான்றிதழாக வழங்குவதுதான் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

அப்படி ஒரு உலகம் போற்றும் பாராட்டாக இந்திய அரசின் மகத்தான பத்மஸ்ரீ விருது **2009** ஆம் ஆண்டு நமது கொங்கு சொந்தம் திரு. ஆறுமுகம் சக்திவேல் அவர்களுக்கு வழங்கியது அவரது சாதனைக் கிரீடத்தில் ஒரு மணியாக அமைந்துள்ளது.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், பத்மஸ்ரீ ஏ.சக்திவேல் அவர்களுக்கு **2009** ஆம் ஆண்டுக்கான "கொங்கு மாமணி" விருதினை வழங்கி, பாராட்டி, வணக்கங்களையும், வாழ்த்துக்களையும் சமர்ப்பித்து பெருமகிழ்ச்சி அடைகிறது.

❖❖❖❖❖

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

## 2008 ஆம் ஆண்டு "கொங்கு சாதனையாளர் விருது" வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. வி.கே.இராமசாமி | சிறந்த விவசாயம் மற்றும் சமுதாயப்பணி |
| 2. | திரு. அட்லஸ் எம்.நாச்சிமுத்து | சிறந்த தொழிலதிபர் மற்றும் சமுதாயப்பணி |
| 3. | திரு. டாக்டர் ஆ.முருகநாதன் | சிறந்த மருத்துவப்பணி மற்றும் சமுதாயப்பணி |
| 4. | திரு. என்.கே.எம்.நல்லசாமி | சிறந்த சமுதாயப்பணி |
| 5. | திரு. டாக்டர் ஜி.செங்கோட்டுவேலு | சிறந்த மருத்துவப்பணி |
| 6. | திரு. டாக்டர் வி.முருகன் | சிறந்த சாதனைப் பேராசிரியர் |
| 7. | திரு. என்.எஸ்.பெரியசாமி | சிறந்த அரசுப்பணி |
| 8. | டாக்டர் சி.சுவாமிநாதன் | சிறந்த கல்விப்பணி |
| 9. | திரு. சி.கந்தசாமி | சிறந்த தொழிலதிபர் மற்றும் சமுதாயப்பணி |
| 10. | திரு. கொங்கு கோவிந்தசாமி | சிறந்த சமுதாயப்பணி |
| 11. | திரு. ஆர்.கோபாலகிருஷ்ணன் | சிறந்த சமுதாயப்பணி |
| 12. | திருமதி. டி.எம்.தங்கமணி | சிறந்த சமுதாயப்பணி |
| 13. | திரு. பி.கோவிந்தசாமி | சிறந்த சமுதாயப்பணி |
| 14. | டாக்டர் ஏ.செல்வி | சிறந்த விஞ்ஞானி |
| 15. | திரு. Er.பி.மோகன் | சிறந்த இளம்தொழிலதிபர் |
| 16. | செல்வி பி.அபராஜிதா | சிறந்த விளையாட்டு வீராங்கனை |

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## கவிஞர் சக்திக்கனல்

**(க.பெ.பழனிச்சாமி)**

1931 ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டம் கல்வெட்டுப்பாளையம் கிராமத்தில் பெரியசாமி கவுண்டர் - சிலம்பாயி அம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். தூரன் குலத்தைச் சேர்ந்த சக்திகனல் அவர்கள். மனைவி அழகுமணி மகன் சிவக்குமார். மகள் கலையரசி

B.Com., பட்டமும், கூட்டுறவுக் கல்வியும் போக்குவரத்துப்பட்டயமும் பெற்ற இவர் மாணவப் பருவத்திலேயே ''பாரதி தொண்டன்" என்ற புனைப்பெயரில் கவிதை புனையத் தொடங்கினார். அமுதசுரபி, ஆனந்த போதினி, தினமணி, கலைக்கதிர் போன்ற பத்திரிக்கைகளில் இவர் கவிதைகள் இடம் பெற்றன.

பூவின் மென்மையோடும் தென்றலின் சுகத்தோடும் - நக்கல் - நையாண்டி, ஆன்மீகம் மொழிப்பற்று, இனப்பற்று, போன்ற தளங்களில் மரபுக்கவிதைகளையும், புதுக்கவிதைகளையும் புனைந்தார்.

கோவை "வானம்பாடி கவிதா மண்டலத்தில்'' சிற்பி, புவியரசு, மேத்தா போன்றவர்களுடன் இணைந்து கவிதைப்பூங்கா அமைத்தவர்.

ஓலைச்சுவடிகளிலிருந்து பெரியசாமிக் கவுண்டர் பெரியகவுண்டர் திரட்டித் தந்த அண்ணன்மார் சுவாமி கதையை அருட்செல்வர். மகாலிங்கம் ஐயா அவர்களின் உதவியுடனும் அருளாசியுடனும் 1971 இல் நூலாகப் பதிப்பித்து இலக்கியத் தகுதி தந்தார்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் எழுதிய பொன்னர் சங்கர் கதைக்கு இந்நூலே முன்னோடி எனில், அது மிகையாகாது. கலைஞர் அவர்கள் இவருடன் கலந்துரையாடி, பல செய்திகளை அறிந்து, அதன் அடிப்படையில் இந்நூலை எழுதினார்.

புலவர் குழந்தையின் நூலை ஆதாரமாகக்கொண்டு தீரன் சின்னமலை என்ற மரபுக்கவிதை நூலையும் எழுதினார். இவை இரண்டும் கொங்கு சமுதாயத்திற்கு இவர் அளித்த கொடைகள்.

இவர் சுமார் 10க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். அவைகளில் சில !

1. சக்திக்கனல் மரபுக்கவிதைகள்
2. கனகாம்பரமும் டிசம்பர் பூக்களும் (புதுக்கவிதை)
3. மலைச்சாமி குன்றுடையான்
4. தீரன் சின்னமலை (காவியம்)
5. வெடித்தது புரட்சி (காவியம்)
6. அண்ணன்மார் சுவாமிகதை
7. பசுஞ்சோலைப்பயணம் (சிறுவர் நாவல்)

இவரின் கவிதைப்போக்கையும், வேகத்தையும் பாராட்டி, மூதறிஞர் தமிழுக்கு "கலைக்களஞ்சியம்" தந்த கொடையாளர் பத்மபூஷன் பெரியசாமித்தூரன் அவர்கள் "சக்திக்கனல்" என்ற புனைப்பெயரைத்தந்தார். இவர் 9 ஆண்டுகள் கூட்டுறவுத் துறையிலும் 35 ஆண்டுகள் ஏ.பி.டி.நிறுவனத்திலும் பணியாற்றி, 2001 இல் ஓய்வு பெற்றார்.

பின்னரும் இவர் பணி தொடர்ந்தது. 1994 முதல் 97 வரை கோவை பாரதியார் பல்கலைக்கழக ஆட்சிப்பேரவை (செனெட்) உறுப்பினராக பதவி வகித்தார்.

பாண்டிச்சேரி ஸ்ரீ அரவிந்தர் சொசைட்டியின் கோவை மையத்தை நிறுவி அதை நன்கு செயல்பட வைத்தார்.

**இவர் பெற்ற பரிசுகளும் விருதுகளும்** :-

1. பசுஞ்சோலைப்பயணம், தீரன் சின்னமலை நூல்களுக்கு State Bank of India-ன் பரிசுகள்.

2. 2002-ல் ஈரோடு தமிழ்ச்சங்கம் வழங்கிய "சாதனையாளர்" விருது

3. 2-3-2003 இல் ஒடாநிலையில் தமிழக அரசு வழங்கிய தீரன் சின்னமலை காவியத்திற்கு விருது.

4. 2006-ல் கர்நாடகா கவுண்டர் சேவா சங்கம் வழங்கிய "பண்பாட்டுக்காணியாளர்" விருது

5. 2008-ல் பாரதியார் பல்கலைக்கழகமும் தமிழ்ப்பண்பாட்டு நிறுவனமும் இணைந்து வழங்கிய "தமிழ்ச்சான்றோர்விருது"

6. பாலிமர் தொலைக்காட்சி வழங்கிய "காலத்தை வென்ற வானம்பாடி" விருது

7. பேரூர் தமிழ்க்கல்லூரி வழங்கிய "தமிழ்ப்பேரறிஞர்" விருது

இவர் தமிழுக்கும் கொங்கு சமுதாயத்திற்கும் ஆற்றியுள்ள பணிகளைப்பாராட்டி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு சாதனையாளர்" விருது வழங்கி கௌரவிக்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



**ஆர்.நல்லதம்பி**

நாமக்கல் மாவட்டம் கரையாம் புதூர் கிராமத்தில் கன்னந்தை குலத்தை சார்ந்த தெய்வத்திரு. இராமசாமி கவுண்டர் - செல்லம்மாள் தம்பதியரின் மகனாக 23-11-1948 ம் ஆண்டில் பிறந்தவர் திருமிகு. ஆர். நல்லதம்பி ஆவார்.

1972 ஆம் ஆண்டு திருச்சி தேசியக் கல்லூரியில் தனது முதுகலைப்பட்ட மேற்படிப்பை முடித்தார். தனது கடின உழைப்பால் சிறந்த தொழில் அதிபராக விளங்கி வருவதோடு தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க தலைவராகவும், நாமக்கல் மாவட்ட கிரஸர் அசோசியேஷன் தலைவராகவும், காமராசர் கல்வி நிறுவனத்தின் தலைவராகவும் பொறுப்புகளை வகித்து வருகிறார்.

சமூக சேவைகளிலும் சமுதாய சேவைகளிலும் பெரிதும் நாட்டம் கொண்டவர்.

தனது சுற்றுப்புற கிராமங்களில் வசிக்கும் பல்வேறு சமுதாயத்தைச் சார்ந்த குடும்பங்களில் ஏற்படும் பல தீராத பிரச்சனைகளை தீர்த்து வைக்க தன்னை அணுகுபவர்களிடம் அன்பால், அரவணைப்பால் அறிவுரைகளை கூறி, பேசித் தீர்த்து அவர்கள் குடும்பத்தில் அமைதி என்ற தீபத்தை ஏற்றி, ஒளி விடச்செய்து வருவதால் பல நூறு குடும்பங்களின் இதயத்தில் வாழ்பவர் இவர்.

2001 ஆம் ஆண்டு முதல் நாமக்கல் கொங்கு வேளாளர் சங்கத்தின் செயலாளராகவும், கீரம்பூர் கொங்கு கல்வி நிறுவனங்களின் செயலாளராகவும்,

பரமத்தி வேலூர் கொங்கு கல்வி நிறுவனங்களின் நிர்வாக உறுப்பினராகவும் கல்விப்பணியினையும் செய்து நமது சமுதாயத்திற்கு பணியாற்றி வருகின்றார்.

இவர் இந்திய தேசிய காங்கிரஸின் உறுப்பினராக 1972 முதல் தன்னை இணைத்துக்கொண்டு புதுச்சத்திர வட்டார காங்கிரஸ் தலைவராகவும், முதலைப்பட்டி தொடக்க வேளாண்மை வங்கி தலைவராகவும், பாப்பநாயக்கன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவராகவும், நாமக்கல் தாலுக்கா பைனான்ஸ் அசோசியேஷன் நிறுவனத் தலைவராகவும் பொறுப்புகளை வகித்து வந்தார்.

இவர் கரையாம் புதூர் கிராம முன்னேற்ற சங்கத்தை நிறுவி அதன் தலைவராக இருந்து வருகின்றார். சேலம் நாமக்கல் தேசிய 4 வழி பாதையில் கரையாம் புதூர் மற்றும் கருங்கல்புதூர் கிராமத்தை சுற்றியுள்ள பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் கொங்கு திருமண மஹால் என்ற சமுதாயக்கூடத்தை நிறுவி அனைத்து சமுதாய மக்களுக்கு பயன்பெற வழிவகை செய்துள்ளார். இதனால் இப்பகுதியில் நமது சமுதாயத்திற்கு பெரும் மதிப்பை தேடித்தந்தவர் இவர்.

1996-2001 ஆண்டுகளில் இவர் புதுச்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். அச்சமயத்தில் தனது ஒன்றியத்தில் 21 பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தை நிறுவி அவைகளுக்கு புதிய சொந்தக் கட்டிடங்களை கட்டிக் கொடுத்து அப்பகுதியில் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டவர் இவர்.

1992 முதல் தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவராக பொறுப்பேற்று இத்தொழில் வளர்ச்சிக்காக சத்துணவில் முட்டையை அரசு வழங்கிடவும், முட்டைக்கு நியாயமான விலை கிடைத்திடவும், நவீன கோழி நோய் தடுப்புமற்றும் புது வகை வீரிய கோழி குஞ்சுகள் கிடைத்திடவும் அயராது பாடுபட்டவர் இவர்.

பிற மாநிலங்களில் ஏற்பட்ட பறவைக் காய்ச்சல் நோய் காரணமாக தமிழக கோழிப்பண்ணையாளர்கள் பெரும் நஷ்டத்திற்கு தள்ளப்பட்டனர். அச்சமயம்

இவருடைய பெரும் முயற்சியால் மத்திய மாநில அமைச்சர் பெருமக்களையும்,இந்திய அரசின் பிரதம அமைச்சரையும் திருமதி சோனியா காந்தி அவர்களையும் நேரில் சந்தித்து 1 லட்சத்து 40 ஆயிரம் டன் மக்கா சோளத்தைமலிவு விலைக்கு பெற்றுத்தந்து கோழிப் பண்ணையாளர்களின் துயரைப் போக்கியது மிகப்பெரிய சாதனையாகும்.

இச்சமயத்தில் பண்ணையாளர்கள் வங்கியில் வாங்கிய கடனிற்கு 4 சதவீதம் சலுகை வட்டி பெற்றுத்தந்து, கடனை திருப்பி செலுத்த கால நீடிப்பு செய்து பண்ணையாளர்களுக்கு உதவியுள்ளார்.

சுனாமி நிதியாக சங்கத்தின் சார்பாக 38 லட்சமும், குஜராத் பூகம்பம் நிதியாக ரூ. 10 லட்சமும் கார்கில் நிதிக்கு 5 லட்சம் முதல்வரிடம் வழங்கியது குறிப்பிடத்தக்கது. சங்கத்திற்கு நிரந்தர வருவாயை பெற்றுத்தரும் நோக்கோடு 3 எடைமேடைகளையும், பெட்ரோல் பங்கும் நிறுவியது இவருடைய முயற்சியே ஆகும்.

இவருடைய சேவைகளில் மிக முக்கியமானது கோழிப்பண்ணை தொழிலின் எதிர்கால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ரூ. 3 கோடி செலவில் 60,000 சதுர அடி பரப்பில் தமிழகத்தில் மிகப்பெரிய தானியக்கிடங்கை கட்டி முடித்ததாகும்.

08-06-2008 ம் தேதி, தமிழக விவசாய துறை, கால்நடை துறை அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர்அதிகாரிகளைக் கொண்டு அப்பகுதி கோழிப்பண்ணையாளர்களுக்கு மட்டுமின்றி, விவசாயிகள் அனைவரும் பயன்பெற்று கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்ற வகையில் இக்கிடங்கு திறந்து வைக்கப்பட்டு தற்பொழுது முழு அளவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இவருடைய சாதனைகளுக்கு பின் நிற்கும் இவரது மனைவி திருமதி. சாவித்திரிஆவார் இவர்களுக்கு திருமதி. சசிகலா என்ற மகளும், திரு. மகேஸ்வரன் என்ற மகனும் உள்ளனர்.

மகள் திருமதி. சசிகலாவின் கணவர் ஈரோடு காடைகுலத்தை சார்ந்த C.D.ஆயில் மில்ஸ் நிறுவன உரிமையாளர் C.துரைசாமி அவர்களின் மகன் திருமிகு. சண்முக சுந்தரம் ஆவர். இவர்களுக்கு இரு ஆண் குழந்தைகள், செல்வன். துரை ஆதவன் மற்றும் செல்வன். துரிய அதீதன் ஆவர்.

மகன் திரு. என்.மகேஸ்வரன் B.A., LLB., பட்டம் பெற்ற வழக்கறிஞர் ஆவார், இவர் கடந்த பாராளுமன்ற தேர்தலில் நாமக்கல் தொகுதியில் தே.மு.தி.க. வேட்பாளர் ஆவார். இவருடைய மனைவி காடை குலத்தை சார்ந்த சேலம் சரஸ்வதி பஸ் உரிமையாளர் திருமிகு. சின்னசாமி கவுண்டர் அவர்களின் புதல்வி திருமதி. சத்யப்பிரியா ஆவார் இவர்களுக்கு செல்வி. நிபுணா என்ற பெண் குழந்தை உள்ளது.

சிறந்த உழைப்பாளியாக, சிறந்த விவசாயியாக, சிறந்த அரசியல் வாதியாக, சிறந்த சமூக, சமுதாய தொண்டான கிராமபுற தொழில் வளர்ச்சிக்கு உதவி பொது மக்கள் மனதில் மதிப்பும் மரியாதையும் பெற்ற, திரு. ஆர்.நல்லதம்பி அவர்களுக்கு அவரின் சாதனைகளைப் பாராட்டி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## பி.எம்.கருப்பண்ணன்

கரூர் வட்டம் ஆத்தூர் கிராமம் கள்ளி பாளையத்தில் மாரப்பகவுண்டர் அருக்காணியம்மாள் தம்பதிக்கு 13-11-1934 இல் பிறந்த கருப்பண்ணன் அவர்கள் அந்துவன் குலத்தைச்சார்ந்தவர். மனைவி திருமதி. முத்தம்மாள். மகன்கள் - திரு.கே.பெரியசாமி, திரு.கே.பாண்டியன், மகள் - பூங்கோதை.

பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு விவசாயத்தில் ஈடுபட்ட இவர் 1956 இல் ஜெமினி பேப்ரிக்ஸ் என்ற ஜவுளி நிறுவனத்தைத் தொடங்கி, கரூர் நகரில் சிறந்த தொழில் அதிபர் ஆனார்.

கரூர் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவராக 5 ஆண்டுகள் சிறப்பாகப்பணி ஆற்றியவர்.

ஏழை மாணவர்களுக்கு சொந்த செலவில் படிப்பதற்கு நிதி உதவி செய்தவர். கொங்கு ஏழை மாணவர்களுக்கு மற்ற அங்கத்தினர் மூலம் முழு நிதி உதவி வழங்க ஏற்பாடு செய்தவர்.

சென்னைக் கொங்கு நண்பர்கள் சங்கத்தில் உறுப்பினராக உள்ளார். கட்டிட நிதி தானும் வழங்கி, பிறரிடமும் பெற்றுத் தந்தவர்.

அவருடைய சொந்த ஊரில் ஆரம்பப்பள்ளி அமைத்து 1961 இல் அன்றைய முதல்வர் காமராஜ் அவர்களால் திறக்கச் செய்து ஊர்மக்களுக்கு இலவசமாக அர்ப்பணித்தார்.

கரூர் நகரத்தில் சேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியை சிறப்பாக நடத்தி வருகிறார். வருடந்தோறும் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்று வருகிறது இப்பள்ளி. இவ்வாண்டு 12 ஆம் வகுப்புத் தேர்வில் மாநில அளவில் 1183 மதிப்பெண்கள் பெற்று முதல் நிலையைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கிராமப்பகுதியில் கல்வித் தரம் உயர வேண்டும் என்று ஸ்டேட் போர்டு பாடத்திட்டம் மூலம் புன்னம் சத்திரத்தில் சேரன் பள்ளியைத் தொடங்கி சிறப்பாக நடத்திவருகிறார்.

மூதறிஞர் வா.செ.குழந்தைசாமி கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை உறுப்பினராக இருந்து சிறப்பாக பணியாற்றி வருகிறார்.

திரு.பி.எம்.கருப்பண்ணன் அவர்களின் கல்வி மற்றும் சமுதாய சேவையைப்பாராட்டி அவருக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கி பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## ஆர்.பெருமாள்சாமி

ஒன்றேகால் ஏக்கர் பூமியில் விவசாயம் செய்து வந்த ஏழை விவசாயி திரு.ராக்கியாக்கவுண்டர், திருமதி குழந்தையம்மாள் ஆகிய தம்பதியருக்கு 26-11-1944 அன்று பிறந்தவர். குடும்ப சூழல் காரணமாக பெற்றோர் விவசாயத் தொழிலில் ஈடுபடுத்தியதால் இவரால் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே கல்வி கற்க முடிந்தது.

விவசாயத்தில் டில்லர் என்ற உழுகின்ற பொறி எந்திரத்தை அப்பகுதி மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். விளைபொருட்களைத் தரகரின்றி தாமாகவே சந்தைப்படுத்தினார். பூமிகளைத் தெரிவு செய்து வாங்குவதிலும் அவற்றைக் கிணறு, சாலைவசதி, மோட்டார் இணைப்பு எனப் பூர்ணமாக கட்டமைப்புகளோடு உருவாக்குவதிலும் இவர் இமாலய வெற்றி கண்டார்.

தொழிலில் புதுமைகளைப் புரிதல், வயதில் மூத்தோரிடம் நட்புக்கொண்டு அவர்களின் அனுபவத்தைக் கேட்டறிதல், எத்திட்டத்திலும் செலவை சிக்கனப்படுத்துதல், கடுமையாக உழைத்தல் போன்ற வெற்றிக் குணங்களை கொண்டிருக்கிறார் திரு.பெருமாள்சாமி.

மஞ்சள் ஊடுபயிர், கரும்பில் ஊடுபயிர் என்ற புதிய முறைகளுக்கு பிள்ளையார் சுழிபோட்ட பிரம்மா இவர். **1968** ஆம் ஆண்டு மஞ்சள் பயிரிடையே ஊடுபயிர் பயிரிட்டால் மகசூல் குறையும் என்றிருந்த நிலையை மாற்றி, மஞ்சளின் ஊடே வெங்காயம், மிளகாய் பயிர்களை விளைவித்து மஞ்சள் மகசூலையும் குறை வில்லாமல் எடுத்து, கூடுதல் வருவாயாக ஊடுபயிர் வருமானத்தையும் அடைந்து காட்டி சக

விவசாயிகளின் பாராட்டுதலைப் பெற்று அவர்களையும், ஊடுபயிர் திட்டத்தை கடைப்பிடிக்கச் செய்தார் இவர்.

இவரது துனைவி திருமதி ஜானகி அவர்கள், இவர்தம் இல்லறப் பயணாய் மலர்செல்வி, சுதா, நித்யா, ஆர்த்தி, அருந்ததி, கிருத்திகா என்ற நல்லறப் புதல்வியர் பிறந்தனர்.

2000 ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது கல்வி எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்து, தன் ஊர் மக்களின் எதிர்காலம் சிறப்பாக இருக்கவேண்டும் என விரும்பி ஒரு கல்லூரி கட்டத்தீர்மானித்தார். எதையும் உடனே செயல்படுத்தும் குணம்கொண்ட இவர், 2000 ஆம் ஆண்டே சத்தியமங்கலத்தில் காமதேனு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தொடங்கினார். இன்று அது 1100 மாணவ, மாணவியர் பயிலும் கல்வி ஆலமரமாக திகழ்கிறது.

கல்வி மேல் கொண்ட தாக்கத்தின் காரணமாக, சமூக நோக்கத்தோடு பன்னிரண்டாம் வகுப்பில் 1100 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றவர்களுக்கும் விளையாட்டுத் துறையில் மாநில, மாவட்ட அளவில் வென்றவர்களுக்கும் முற்றிலும் இலவசமாக கல்லூரிக் கல்வியை இங்கு வழங்குகிறார் திரு.பெருமாள்சாமி. இக்கல்லூரி ISO 9001-2008 தரச்சான்று பெற்றுத் திகழ்கிறது.

விவசாய பூமிகளால் சூழப்பட்ட கிராமத்தில் இருந்து கொண்டும் வாய்ப்பைத் தேடி பொருள் ஈட்ட முடியும், சாதனைகள் படைத்திட முடியும் என நிரூபித்துள்ளார் திரு. ஆர்.பெருமாள்சாமி அவர்கள்.

சத்தியமங்களம் T.N.பாளையம் தாது தோட்டத்தில் நிலக்கிழாராவும், காமதேனு கலை அறிவியல் கல்லூரியில் நிர்வாகத் தலைவராகவும் உள்ளார் திரு.பெருமாள்சாமி அவர்கள்.

ஏட்டுக்கல்வி இல்லையென்றாலும் வாழ்க்கை எனும் பட்டறிவுப் பல்கலைக்கழகத்தில் பயின்று விவசாயத்திலும், கல்விப்பணியிலும் சிறந்து விளங்கும் திரு. ஆர். பெருமாள்சாமி அவர்களுக்கு கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



**ஆர்.ருக்மணி**

திருமதி ஆர்.ருக்மணி அவர்கள் நாமக்கல் ராசாம்பாளையம் பயிரன் கூட்டத்தைச் சார்ந்த திரு. இராமசாமிக்கவுண்டர் - பாவாயம்மாள் தம்பதியருக்கு ஐந்தாவது குழந்தையாக, 1952 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இரண்டாம் தேதி வெள்ளிக்கிழமை அன்று பிறந்தார். வெள்ளிக்கிழமை பிறந்த குழந்தை நற்பேறு பெற்று விளங்கும் என்ற எதிர்பார்ப்பு பெற்றோர்களிடம் இருந்தது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பெண் குழந்தையைப் படிக்க அனுப்புவது கொங்கு வேளாளர் சமூகத்தில் அரிய செயலாகவே இருந்தது. எனினும் திருமதி. ருக்மணி பள்ளிப்படிப்பை நாமக்கல்லில் முடித்தார். நாமக்கல்லில் அப்பொழுது கல்லூரி இல்லாத காலம் அதனால் பி.யு.சி. படிக்க சேலம் செல்ல வேண்டியதாயிற்று.

பிறகு பல்வேறு தடைகளையும் கடந்து திருச்சி சீதாலட்சுமி ராமசாமி கல்லூரியில் இளங்கலை, முதுகலைஅறிவியல் பட்டங்களைப் பெற்று முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தார். 1975 ஆம் ஆண்டு பட்டம் பெற்ற உடனே கடலூர் கந்தசாமி நாயுடு கல்லூரியில் துணைப்பேராசிரியராகப் பதவியேற்றார். இவர் கல்லூரியில் படிப்பதற்கும், கல்லூரிப் பணியில் சேர்வதற்கும் இவரது அண்ணன் பொறியாளர் பழனிசாமி அவர்கள் பெரிதும் துணை நின்றார்.

1977 முதல் காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியிலும், 1980 முதல் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் தமது பணியைத் தொடர்ந்தார். சென்னையில் கலவரங்களுக்குப் பச்சையப்பன் கல்லூரி மாணவர்களே காரணம் என்பது பொதுவான குற்றச்சாட்டாக இருக்கும். ஆனால் அங்கு கணிதத் துறையில் சனி மற்றும்

ஞாயிற்றுகிழமைகளில் கூட சிறப்பு வகுப்புகள் வைத்து மாணவர்களை முதல் வகுப்பில் தேர்ச்சி பெறச் செய்தார். அந்த அளவு கணிதத்துறை சிறப்பாக இயங்குவது அங்கு உள்ளவர்களுக்கு மட்டும்தான் தெரியும். கணிதப் பேராசிரியராக கடந்த 35 ஆண்டுகால அனுபவத்தில் பலஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கியுள்ளார்.

பச்சையப்பன் கல்லூரி கணிதத் துறையில் 1980 ஆண்டு முதல் பெண் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார். அவரை ஆடவர் கல்லூரியில் பணியில் அமர்த்துவதற்கு அன்று தயங்கிய நிர்வாகம், இன்று அதே கல்லூரியில் முதல்வராகவும், துறைத்தலைவராகவும், விடுதிக்காப்பாளராகவும் மூன்று முக்கியப் பொறுப்புகளில் பணியமர்த்தியுள்ளது. அனைவரும் பாராட்டும் வகையில் அவற்றைத் திறம்பட நிர்வகித்து வருகிறார்.

பச்சையப்பன் கல்லூரியில் கணிதத்துறையில் முதல் பெண் பேராசிரியர், முதல் பெண் துறைத்தலைவர், முதல் பெண் முதல்வர், முதல்பெண் விடுதிக்காப்பாளர் ஆகிய நான்கு சாதனைகளை நிகழ்த்தியவர் என்பது மட்டுமல்லாமல், கொங்கு நாட்டைச் சார்ந்த, கொங்கு இனத்தைச் சார்ந்த ஒருவர், இரண்டு நூற்றாண்டு பழமை வாய்ந்த பச்சையப்பன் கல்லூரியில் நிர்வாகப் பொறுப்பேற்று திறம்பட நிர்வகித்து வருவது நம் கொங்கு நண்பர்கள் சங்கத்துக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

கண்ணன் கூட்டத்தைச் சார்ந்தவரும், தொடக்கக் காலமுதல் கொங்கு சங்கத்தில் உறுப்பினரும், முன்னாள் செயற்குழு உறுப்பினருமான, இவரது கணவர் டாக்டர். சி.சுப்பிரமணியம் மாநிலக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவர்களது மக்கள் திரு. ஆர்.எஸ்.அசோக்குமார், திரு. ஆர்.எஸ்.சுமன் ஆகிய இருவரும் அமெரிக்காவில் பொறியியல் மேற்படிப்பு முடித்துவிட்டு, பாஸ்டனிலும், கனடிகட்டிலும் பணியாற்றிக்கொண்டுள்ளார்கள்.

கொங்கு சமுதாயம் பெருமைப்படும் வகையில் திருமதி ஆர்.ருக்மணி அவர்கள் ஆற்றிவரும் கல்விப்பணியைப்பாராட்டி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கி வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் பி.செல்வராஜ்

நாமக்கல் மாவட்டம் பெரியப்பட்டி கிராமம்,சேரன் கூட்டத்தை சார்ந்த தெய்வத் திரு. P.பழனிக்கவுண்டர் - திருமதி காளியம்மாள் ஆகியோருக்கு மகனாக 25-06-1956 - ல் பிறந்தார். இவருடைய தந்தை 50 ஆண்டுகளுக்கு முன்பே கர்நாடகமாநிலம் பத்ராவதிக்கு குடிபெயர்ந்தார். சிறந்த ஒப்பந்ததாரராகவும் வணிகராகவும் தொழில் புரிந்தார்.

இவர் 1978 ம் ஆண்டு தனது மருத்துவ படிப்பை கர்நாடகாவில் உள்ள J.J.M.மருத்துவக் கல்லூரியில் முடித்து பத்ராவதி, கண்ணப்பூரில் "சிவாநர்சிங்ஹோம்" என்ற மருத்துவமனையை நிறுவி கிராமப்புற ஏழை எழிய மக்களுக்கு மருத்துவப் பணி செய்து வருகிறார்.

கர்நாடகா மாநிலம் பத்ராவதியில் சிமோகா, சிக்மங்களூர், ஹாசன் வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய மலைநாடு பகுதி கவுண்டர் சேவா சங்கத்தை 2004 ஆம் ஆண்டு நிறுவி அதன் நிறுவன தலைவராக பொறுப்பு ஏற்று அதன் மூலம் நமது சமுதாயம் வளம் பெற பல சேவைகளை சிறப்பாகச் செய்துள்ளார்.

1950, 1960 ம் ஆண்டுகளில் கரூர், நாமக்கல், திருப்பூர் பகுதியில் இருந்து குடிபெயர்ந்த சுமார் 100 கொங்கு குடும்பங்கள் இப்பகுதியில் வசிக்கின்றனர்

மலைநாடு பகுதி கர்நாடக கவுண்டர் சேவா சங்கம் அப்பகுதியில் உள்ள பிற சேவை அமைப்புகளோடு இணைந்து பல்வேறு நலப்பணிகளை செய்து வருகிறது.

சமீபத்தில் இலவச கண் சிகிச்சை முகாமை நடத்தி சுமார் 100 நபர்களுக்கு அரவிந்த் கண் மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

பத்ராவதியில் இதுவரை நான்கு இரத்ததான முகாம்களை நடத்தியுள்ளனர். சித்தார்த்தா பார்வையற்றோர் பள்ளிக்கும், தரங்கா ஊமை மற்றும் காதுகேளாதோர் பள்ளிக்கும் தேவையான உதவிகளைச் செய்வதின் மூலம் அப்பகுதி பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்ற சங்கமாக உள்ளது.

இவர் பத்ராவதி - சுகர்டவுன் அரிமாசங்கத்தின் தலைவராக இருமுறை பணியாற்றியுள்ளார். இவர் கடந்த 25 ஆண்டுகளாக அரிமா சங்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு பல்வேறு சேவைத்திட்டங்களுக்கு தலைமை பொறுப்பினை ஏற்று மிகச்சிறப்பாக சேவை திட்டங்களை நிறைவேற்றி வருகின்றார்.

மேலும் தரங்கா ஊமைமற்றும் காது கேளாதவர் பள்ளியின் அறங்காவளராகவும் சிமோகாவில் உள்ள மலைநாடு புற்றுநோய் மருத்துவமனையின் நிர்வாகக்குழு உறுப்பினராகவும் உள்ளார்.


இவருடைய மனைவி திருமதி ஆர்.தமிழரசி, நாமக்கல் மாவட்டம் இருட்டானைப்புதூர் கிராமத்தைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தெய்வத்திரு. ஆர்.ரங்கசாமிக் கவுண்டரின் மகள் ஆவார். இவர். M.Sc., (Bio-Chem) பட்ட மேற்படிப்பு படித்தவர். இவர் தனது கணவருக்கு உதவியாக பத்ராவதியில் மருத்துவ பரிசோதனைக்கூடத்தை நிறுவி நிர்வகித்து வருகிறார்.

இவர்களுக்கு செல்வன் எஸ்.சபரீஸ்வரன் என்ற மகனும், செல்வி எஸ்.விணுதா என்ற மகளும் உள்ளனர். மகன் பொறியியல் பட்டதாரி, மும்பையில் பணியாற்றுகிறார். மகள் தார்வார் S.D.M.கல்லூரியில் இறுதியாண்டு மருத்துவம் பயின்று வருகிறார்.

Dr.பி.செல்வராஜ் அவர்களையும், மலைநாடு பகுதி கர்நாடக கவுண்டர் சேவா சங்கத்தையும் பாராட்டும் விதமாக சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அவருக்கு “கொங்கு சாதனையாளர்” விருதை வழங்கி பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## எஸ்.இராஜேந்திரன்

1953 ஆம் ஆண்டு கரூர் மாவட்டம், பஞ்சமாதேவி கிராமம், சந்தனகாளிபாளையம் என்ற சிற்றூரில் வெண்டுவன் குலத்தை சேர்ந்த சங்கிலிமுத்து கவுண்டர் - பாப்பம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியை பஞ்சமாதேவியிலும், உயர் நிலைக்கல்வியை கரூர் நகரிலும் முடித்த இவர் கல்லூரி படிப்பை திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியிலும், சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் முடித்தவர். கல்லூரி படிப்பை முடித்த பின் விவசாயத்தில் சுமார் ஐந்து ஆண்டுகள் ஈடுபட்டகாலத்தில் 1980 ம் ஆண்டு திருமணம் ஆனது. 1982 ம் ஆண்டு கரூர் நகரில் டெக்ஸ்டைல்ஸ் தொழில் ஈடுபட ஆரம்பித்தார். 1983 ம் ஆண்டு அர்ச்சனா டெக்ஸ் என்ற நிறுவனத்தை ஏற்படுத்தினார்.

1983 ஆம் ஆண்டு கரூர் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் உறுப்பினரானார். கல்லூரி நாட்களில் சென்னை கொங்கு மாணவர் சங்கத்தில் இருந்தபோது ஏற்பட்ட ஈடுபாட்டின் காரணமாக விரைவில் 1988 ஆம் ஆண்டு கரூர் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயலாளரானார். இவர் செயலாளராக செயல்பட்ட காலத்தில் தான் நமது இன மாணவர்களுக்கு கல்வி உதவித்திட்டம் துவக்கப்பட்டு இன்று வரை அது செயல்பட்டு வருகின்றது. 1993 ம் ஆண்டு கரூரில் நடந்த கொங்கு வேளாளக்கவுண்டர்கள் பேரவையின் மாநில மாநாட்டின் வெற்றியில் பெரும்பங்கு இவருக்கு உண்டு. 1994ம் ஆண்டு கரூர் ரோட்டரி சங்கத்தின் தலைவரானார். அதே ஆண்டு நமது இன மக்கள் சிலரோடு ஒன்று கூடி கரூரில் கொங்குக்கல்வி அறக்கட்டளையைத் துவக்கியதில் பெரும் பங்கு ஆற்றினார்.

அந்த அறக்கட்டளையின் மூலம் 1997 ம் ஆண்டு கொங்கு அறிவியல் கல்லூரியைத் துவக்கியதோடு அதன் தாளாளராக சுமார் எட்டு ஆண்டுகள் பணியாற்றினார். தற்போது கொங்கு மேல்நிலைப்பள்ளியைத் துவக்கி அதன் தாளாளராக கடந்த மூன்று

ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் நீண்டகால உறுப்பினர் (உறுப்பினர் எண். 510) மேலும் சென்னை கொங்கு நாடு இல்லத்தில் ஒரு அறை இவர் பெயரில் உள்ளது. அதற்கு ரூ. 25,000 நன்கொடை அளித்துள்ளார்.

மேலும் கரூர் மாவட்ட ஊர்க்காவல் காவல் படைதளபதியாக 2002 முதல் 2007 ம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகள் செயல்பட்டார். கரூர் காகித ஆலை விபத்து தடுப்பு ஆலோசனைக்குழு உறுப்பினராகவும், கரூர் கிளைச்சிறைச்சாலை நல குழு உறுப்பினராகவும், பாரதிதாசன் பல்கலைக்கழக செனட் உறுப்பினராகவும் செயல்பட்டு உள்ளார். கரூர் மாவட்டத்தின் மிகப்பெரிய பள்ளியான சேரன் பள்ளியில் ஆலோசனைக்குழு உறுப்பினராக கடந்த இருபது ஆண்டுகளாக செயல்பட்டு வருகின்றார். கரூர் அரசு கலைக்கல்லூரியில் (தன்னாட்சி) கல்விக்குழு (அகடமிக் கவுன்சில்) உறுப்பினராகவும் உள்ளார்.

ரோட்டரி சங்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் வருகின்ற 2011-2012 ஆண்டிற்கு மதுரை, திருச்சி உள்ளிட்ட எட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய ரோட்டரி மாவட்டம் 3000த்தின் மாவட்ட ஆளுனராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

மேலும் இவர் தனது குல தெய்வமான மண்மங்கலம் காளியம்மன் கோவில் அறக்கட்டளை உறுப்பினராகவும், கரூர் அறிவுத்திருக்கோவில் அறக்கட்டளையின் அறங்காவலராகவும் உள்ளார். இவ்வாறு நமது இனத்திற்காக அதன் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஆகிய பணியிலும், சமுதாயப்பணியிலும், கல்விப்பணியிலும் மக்கள் நல பணியிலும் அதிக ஈடுபாடு கொண்ட இவரை "அர்ச்சனா" இராஜேந்திரன் என்று கரூர் மக்கள் அடையாளம் காணுகின்றனர்.

இவருக்கு திருமதி. மீனாட்சி மதுரம் என்ற வாழ்க்கைத் துணைவியும் - R.மணிவேல், R. கமலவேல் என்ற இரு மகன்களும் உள்ளனர். இருவரும் சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் படித்து, ஒருவர் வேலையிலும் ஒருவர் சொந்தத் தொழிலிலும் ஈடுபட்டு உள்ளனர்.

தொழில்துறையிலும், கல்விப்பணியிலும், சமுதாயப்பணியிலும் சிறந்து விளங்கும் திரு. எஸ்.இராஜேந்திரன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு சாதனையாளர்" விருது வழங்கிப் பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



**பி.எம்.நாச்சிமுத்து**

பல்லடம் அருகில் உள்ள கொசவம்பாளையம் கிராமத்தில் ஆர். மாரப்ப கவுண்டர், வேலாத்தாள் தம்பதியருக்கு மகனாக 1953 ம் ஆண்டு பிறந்தார் திரு. பி.எம்.நாச்சிமுத்து அவர்கள்.

5 ம் வகுப்பு வரை சொந்த ஊரிலும். பின் பல்லடம் அரசு உயர்நிலைப்பள்ளியில் 1970 ம் ஆண்டு SSLC ம் பயின்றார். படிப்பு முடிந்தவுடன் சுமார் 3 ஆண்டுகள் பால் வியாபாரம் செய்து சம்பாதித்து அத்துடன் தனது தந்தை கொடுத்த ரூ. 10,000/- ம் சேர்த்து சுமார் ரூ. 25,000/- ரூபாய் முதலீட்டில் 4 விசைத்தறிகளை நிறுவி, அதை மூன்று ஆண்டுகளில் 20 தறிகளாக உயர்த்தி தொழில் முன்னேற்றம் கண்டார்கள்.

1980 ம் ஆண்டு ஸ்ரீ கிருஷ்ணா சைசிங் மில் என்ற நிறுவனத்தை தொடங்கி சுமார் 500 விசைத்தறிகள் இயங்க வேலை வாய்ப்பை நல்கி உதவினார்.

2003 ம் ஆண்டு S.K.T.டெக்ஸ்டைல் மில்ஸ் எனும் நிறுவனத்தை தொடங்கி அதிநவீன விசைத்தறிகள் மூலம் தரமான துணிகளை உற்பத்தி செய்து அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார்.

1990 ல் பல்லடம் வட்டத்தில் சுமார் 40 உறுப்பினர்களுடன் இணைந்து பல்லடம் டெக்ஸ்டைல் டிரேடர்ஸ் சங்கத்தை உருவாக்கி அதன் தலைவராகப் பொறுப்பேற்று 10 வருட காலம் விசைத்தறி தொழில் முன்னேற்றத்திற்கு பாடுபட்டார். விசைத்தறி உரிமையாளர்களின் பிரச்சனைகளுக்கு அவ்வப்போது தமிழக அரசுடன் பேசி தீர்வு கண்டார்.

2002 ல் கோவை மாவட்ட விசைத்தறி உரிமையாளர்கள் சம்மேளனத்தை தோற்றுவித்தபோது அதன் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டு, விசைத்தறி தொழிலை மிகவும் பாதித்த Cenvat வரியை நீக்க மத்திய, மாநில அரசுகளுடன் பேசி, போராடி அந்த வரியை முழுவதும் நீக்கி தொழில் பிரட்சனையைத் தீர்த்ததில் பெரும் பங்கு வகித்தவர்.

மேலும் பல்லடம் பகுதியில் இருந்து வடமாநிலங்களுக்கு பொருட்களை அனுப்ப தேவையான லாரி புக்கிங் அலுவலகங்களை பல்லடத்தில் துவக்க முயற்சி மேற்கொண்டார். பல்லடம் பகுதியில் வங்கிக் கிளைகள் அமைக்கவழிவகை செய்தார்.

1999 ல் பல்லடம் அரிமா சங்கத்தில் உறுப்பினராகி பின்னர் தலைவர் மற்றும் மாவட்டத்தலைவர் பொறுப்புகளை வகித்து பல்வேறு சமூகநலப்பணிகளை மேற்கொண்டார். பல்லடம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு தேவையான பல்வேறு உதவிகளை செய்து வருகிறார்.

முன்னாள் மாணவர் சங்கம் மூலமாக முப்பதுஇலட்சம் ரூபாயில் கட்டிடப்பணிகள் செய்ததில் முக்கியப் பணியாற்றியுள்ளார். பல்லடத்தில் கொங்கு வேளாளர் திருமண மண்டபத்தை 2001ல் ஆரம்பித்துஅதன் ஆரம்பகால நிர்வாகியாக இருந்து சிறப்பாகச் செயல் பட்டவர்.

ஆன்மீகப் பணியில் பல்லடம் அருகில் உள்ள காளிவேலம்பட்டியில் உள்ள குல தெய்வக் கோவிலான வேலாத்தாள் திருக்கோவிலின் உபதலைவராக சிறப்பாகப் பணியாற்றியவர். சொந்த ஊரான கொசவம் பாளையத்தில் சுமார் 30 லட்சம் செலவில் ஊர் மக்களுடன் இணைந்து புதிய கோவில்களை கட்டி வருகிறார்.

தொழில், சமூக மற்றும் ஆன்மீகப் பணிகளில் சிறப்பாக செயல்பட்டுவரும் திரு.பி.எம்.நாச்சிமுத்து அவர்களை வாழ்த்தி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு சாதனையாளர்" விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## முனைவர் சி.சின்னுசாமி

முனைவர். சி.சின்னுசாமி அவர்கள் 1959-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாள் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு தாலுக்கா, எளச்சிபாளையம் யூனியனில் உள்ள ஆயித்தாகுட்டை என்ற சிறிய கிராமத்தில் அமரர் திரு. சின்னாக்கவுண்டர் மற்றும் திருமதி. பாப்பாயம்மாள் ஆகியோருக்கு இரண்டாவது மகனாக பிறந்தார். 1975 ஆம் ஆண்டு பள்ளிப்படிப்பையும், 1980-ஆம் ஆண்டு பட்டப்படிப்பையும் 1986 ஆம் ஆண்டு வேளாண்மையில் முனைவர் பட்டப்படிப்பையும் முடித்து 1986 ஆம் ஆண்டு முதல் கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பல்வேறு நிலைகளில் பணியாற்றி தற்போது, உழவியல் துறை பேராசிரியராக பணியாற்றி வருகிறார்.

1984 ஆம் ஆண்டு முனைவர் சி.ஜெயந்தி அவர்களை திருமணம் செய்துகொண்டார். இவர்களது மகள் செல்வி சி.ஜெ.சௌபர்ணிகா தற்போது பொறியியல் பட்டப்படிப்பு முடித்துள்ளார்.

**சாதனைகள்** :

வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர் நிலங்கள், நீர் நிலைகள் மற்றும் பயிர்சாகுபடி செய்யாத நிலங்கள் ஆகிய பகுதிகளில் வளரும் பிரச்சனைக்குரிய களைகள், ஒட்டுண்ணிக்களைகள் அனைத்தையும் கட்டுப்படுத்துவதற்கான நவீன தொழில்நுட்பங்களை கண்டறிந்துள்ளார்.

களை நிர்வாகத்தில் 75க்கு மேலான ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி பிரசுரித்துள்ளார். அவை உலக அளவில், வெகுவாக பாராட்டப்பட்டுள்ளன. இத்துடன் களை நிர்வாக தொழில்நுட்பத்தில் மூன்று புத்தகங்களையும் எழுதியுள்ளார். களை நிர்வாக துறையில் ரூ. 125 இலட்சம் மதிப்பீட்டில் இந்திய அளவில் நடைபெற்ற 20க்கும் மேற்பட்ட திட்டங்களுக்கு முதன்மை விஞ்ஞானியாக செயல்பட்டுள்ளார். இவர் ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளை 50க்கும் மேலான தொழில்நுட்ப கட்டுரைகளாக விவசாய பெருமக்களுக்கு கொடுத்துள்ளார்.

இந்தியா, அமெரிக்கா, கனடா, துருக்கி, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா மற்றும் ஸ்ரீலங்கா போன்ற நாடுகளில் நடைபெற்ற உலக அளவிலான வேளாண் ஆராய்ச்சி கருத்தரங்குகளில் கலந்து கொண்டு ஆராய்ச்சி முடிவுகளை எடுத்துரைத்துள்ளார் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

இச்சாதனைகளைப்பாராட்டி 2006-2007 ம் ஆண்டு தமிழக அரசின் சிறந்த களை நிர்வாக உழவியல் நிபுணர் விருதையும், 2008ம் ஆண்டு இந்திய களை நிர்வாக குழுமத்தின் சிறந்த களை நிர்வாக ஆராய்ச்சியாளர் விருதையும் பெற்றுள்ளார். இத்துடன் இவர் பணியாற்றும் அகில இந்திய களை நிர்வாக ஆராய்ச்சித் திட்டத்தினை இந்தியாவிலேயே தலைசிறந்த ஆராய்ச்சித்திட்டமாக இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம் 2008ம் ஆண்டு அறிவித்து, பாராட்டி விருது வழங்கியுள்ளது.

வேளாண்மை ஆராய்ச்சி மற்றம் கல்வித் துறையில் சிறந்த பணியாற்றியுள்ளதைப்பாராட்டி முனைவர் திரு. சி.சின்னுசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கிப் பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



**சி.பொன்னுசாமி**

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம், திரு. சின்னப்ப கவுண்டர் திருமதி பழனியம்மாள் தம்பதிகளுக்கு 24-12-1940 ஆம் வருடம் திரு. பொன்னுசாமி கவுண்டர் அவர்கள் மகனாக பிறந்தார்.

மேட்டுப்பாளையம் மகாஜன பள்ளியில், விளையாட்டின் மீது அதிக ஆர்வம் கொண்ட காரணத்தால் தனது கல்வியை 8 ஆம் வகுப்போடு முடித்துக்கொண்டார். இவர் மிகச் சிறந்த கால் பந்தாட்ட வீரரும், சதுரங்க விளையாட்டு வீரரும் ஆவார். இவர் மேட்டுப்பாளையத்தில் மிகச் சிறந்த அணிகளை அழைத்து கால் பந்தாட்ட போட்டிகளையும், சதுரங்க போட்டிகளையும் நடத்தி வந்தார்.

1971 ஆம் வருடம் சாந்தா அழகேஷ்வரி என்கின்ற பெயரில் ஒரு டிரான்ஸ்போர்ட் கம்பெனியை ஆரம்பித்து மேற்படித்துறையில் தனக்கென்று ஒரு முத்திரை பதித்து கொண்டார். தொழில்துறையில் ஆர்வம் கொண்டிருந்தாலும் விவசாயத்தையும் பேணிபாதுகாத்து வந்தார். தனது டிரான்ஸ்போர்ட் கம்பெனி மூலம் கோவில் திருவிழாக்களுக்கு இலவசமாக குடிநீர் சப்ளை செய்து பொதுமக்களின் தாகத்தை தணித்தார். இவரது தொழில் நன்கு வளர, வளர இவரது ஈகை குணமும் வளர்ந்து வந்தது இவரை நாடி வந்தவர்களுக்கு கோவில், பள்ளிக்கூடம், சமுதாயக்கூடம்

ஆகியவைக் கட்டிக்கொடுத்து, வசதியற்றவர்களுக்கு படிப்பிற்கும் மருத்துவத்திற்கும் தொடர்ந்து உதவிகளும், நன்கொடைகளும் அளித்து வந்தார்.

இவருக்கு திருமதி தனலட்சுமி, திருமதி. சாந்தி என்ற மனைவிகளும், திருமதி. சாந்தா அழகேஸ்வரி, திருமதி சம்பூர்ணம், என்ற மகள்களும் திரு.பாலகணேஷ் என்ற மகனும், திருமதி. சாந்தி பாலகணேஷ் என்ற மருமகளும் உள்ளனர்.

1982 ஆம் வருடம் பழையக்கோட்டை பட்டக்காரர் திரு.நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் அவர்களை அழைத்து வந்து கொங்கு நற்பணிமன்றம் என்ற அமைப்பை உருவாக்கி அதன் பொருளாளராக செயல்பட்டு நகரில் நல்ல பலகாரியங்கள் செய்து வந்தார்.

அதன் காரணமாக அனைத்து சங்கப் பெரியோர்களின் ஒத்துழைப்போடு 2002 ஆம் ஆண்டு "அனைத்துஇந்து சமுதாய சங்கம்" என்ற அமைப்பினை உருவாக்கி அனைத்து சமுதாய சங்க தலைவர்களையும் மேற்படி அமைப்பில் உறுப்பினர்களாக்கி அந்த சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு பவானிநதி கரையோரம் ஈமச்சடங்குகள் செய்வதற்கு நந்தவனத்தை உருவாக்கும் முயற்சியில் அனைத்து மக்களின் ஆதரவோடு ஈடுபட்டார். மேற்படி நந்தவனத்தில் காரியங்கள் செய்வதற்கு நிழல் கூரைகள், அலுவலகம், நதியில் குளிப்பதற்கு படித்துறைகள், கோமாதா கூடம் உணவு வளாகங்கள் குளியலறை, கழிவறை கட்டப்பட்டு இந்த 6 வருடங்களில் சுமார் 1 கோடி அளவிற்கு பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இவை அனைத்திற்கும் திரு. பொன்னுசாமி கவுண்டர் அவரின் சீரிய முயற்சியே காரணம் இருவரின் பணிகளை இந்து சமுதாய சங்கங்கள் மட்டுமன்றி மாற்று சமுதாயத்தினரும் பாராட்டுகிறனர்.

1984 ம் ஆண்டு திருமண மண்டபம் கட்டுவதற்காக 7.5 சென்ட் நிலத்தை கொங்கு வேளாளக் கவுண்டர்கள் சங்கத்திற்கு வழங்கியுள்ளார். இவரது பணிகளை பாராட்டி சமீபத்தில் துவங்கப்பட்ட கொங்கு நாடு முன்னேற்றக் கழகத்தின் நகர தலைவராக நியமனம்செய்யப்பட்டுள்ளார்.

**இவரது சேவையை பாராட்டி அளிக்கப்பட்ட விருதுகள்**

1. "அருந்தகை அண்ணல்" வழங்கியோர் ஐயப்ப சேவா சமிதி, மேட்டுப்பாளையம்.
2. "சாதனை செம்மல்" வழங்கியோர் திரைப்பட நடிகர் கலைமாமணி திரு. டெல்லி கணேஷ் அவர்கள் நகர பிராமண சங்க சார்பில் 29-05-2006
3. "சமுதாய காவலர்" வழங்கியோர் திரு முனிவேல் D.I.G.அவர்கள் கோவை சரகம், கலைப்பிரியர்கள், கல்வி சமுதாய அறக்கட்டளை பிரஸ்காலனி சார்பாக 1-6-2008
4. "சமுதாய காவலர்" வழங்கியோர் திரு முனிவேல் D.I.G.அவர்கள் கோவை சரகம், கலைப்பிரியர்கள், கல்வி சமுதாய அறக்கட்டளை பிரஸ்காலனி சார்பாக 06-07-2007
5. "இந்து சமுதாய சேவா திலகம்" வழங்கியோர் பிராமண சங்கம், சென்னைஇடம் தெண்மண்டல மாநில மாநாடு நாகர்கோவில் 14-09-2008

மேட்டுப்பாளையம் பகுதியில் நமது கொங்கு சமுதாயத்திற்கு பெரும் மதிப்பைச் சேர்த்துள்ள திரு. சி.பொன்னுசாமி அவர்களைப் பாராட்டி, மேலும் அவரது சேவைகள் தொடர வாழ்த்தி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு சாதனையாளர்" விருது வழங்கிக் கௌரவிக்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## எஸ்.ஜெகநாதன்

பவானி வட்டம், தயிர்பாளையம் என்ற கிராமத்தில் 1957 ஆம் ஆண்டு திரு. K.R.சீரங்கசாமி கவுண்டர், நல்லம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.

தயிர்பாளையம் ஆரம்பப்பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்து, பின் பவானி அரசு உயர்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வியை முடித்தார்.

தனது கல்லூரி பட்டப்படிப்பை ஈரோடு சிக்கய்ய நாயக்கர்கல்லூரியில் முடித்தார்.

பள்ளி, கல்லூரி நாட்களில் சமூக சேவை பணிகளில் ஒரு மாணவனாக தன்னை ஈடுபடுத்திக்கொண்டு பல சமுதாயத் தொண்டு அமைப்புகளுடன் சேர்ந்து பல்வேறு சேவைகளை செய்துள்ளார். பல இரத்ததான முகாம்களை நடத்தி சிறந்த சேவைகள் புரிந்துள்ளார்.

1978 ஆம் ஆண்டு திருமதி. சிவகாமியை மணந்து மூன்று பெண் குழந்தைகளை ஈன்றெடுத்து அவர்கட்கு சரியான கல்வியைக் கொடுத்து, அவர்களுக்கு மணம் முடித்து, பேரன் பேத்திகளுடன் ஒரு குடும்ப பல்கலைக்கழகத்தை ஏற்படுத்திய நிம்மதியுடன் இனி எனது தொழில்நேரம்போக சமுதாயப்பணிதான் எனது சந்தோஷம் என்ற முடிவுடன் சமுதாயப்பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டுள்ளார்.

அன்மையில் தனது தொழில், அரசியல் குரு சோமனூர் திரு. BRT சென்னியப்பன் அவர்கள் உதவியுடன் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கு 150 உறுப்பினர்களைச் சேர்த்து ரூபாய் 15 இலட்சம் நிதியை மூன்றே மாதங்களில் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொங்கு அரசியல் அமைப்பிற்கு இவரது சேவை அளவிடமுடியாதது. அதிக உறுப்பினர்கள் சேர்க்கை, ஒரே நாளில் 60 கிளைகள் திறப்பு, அமைப்பு எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு வெற்றியைத் தேடித்தந்து பாடுபடுவது போன்ற பல முற்போக்கான செயல்பாடுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

பேரவையின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட அனைத்து கொங்கு சொந்தங்களுடனும் நல்ல நட்பைக்கொண்டுள்ளார் திரு. ஜெகநாதன் அவர்கள்.

மிகவும் முக்கியமான கிராமப்புற விவசாயப் பிரச்சினைகளான கள் இறக்கும் போராட்டம், கரும்பு விவசாயிகளுக்கு உரிய விலை நிர்ணயம் மற்றும் விவசாயம் சார்ந்த போராட்டம் ஆகிய முயற்சிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு சமுதாயப்பணி ஆற்றிவருகின்றார்.

இவரது சமுதாயப்பணி சிறக்க, அதில் அவர் தன்னை மென்மேலும் ஈடுபத்திக்கொண்டு பணியாற்றிட கொங்கு நண்பர்கள் சங்கம் திரு. S.ஜெகநாதன் அவர்களுக்கு “கொங்கு சாதனையாளர்” விருதை வழங்கி சிறப்பிக்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## அசோகன் முத்துசாமி

காங்கேயம் அருகில் உள்ள சிலம்பகவுண்டன் வலசு என்ற கிராமத்தில் 15-07-1960 ஆம் ஆண்டு S.K.முத்துசாமிக் கவுண்டர், நாச்சாத்தாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் திரு. அசோகன் அவர்கள்.

உதகமண்டலத்தில் பள்ளிப்படிப்பையும், இளம்கலை (வேதியியல்) படிப்பையும் பயின்றார். பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் MBA பட்டம் பெற்றார்.

படிப்பு முடிந்தவுடன் உதகையில் ஓர் 3 நட்சத்திர ஹோட்டலை நடத்தி வந்தார். பின்னர் கோவைக்கு இடம் பெயர்ந்து 1998 ல் அம்பாள் ஆட்டோ நிறுவனத்தைத் தொடங்கினார். வாடிக்கையாளர் சேவையில் சிறந்து விளங்கும் இந்த நிறுவனம் படிப்படியாக வளர்ந்து தற்போது கோவை, நீலகிரி, ஈரோடு, திருப்பூர், நாமக்கல் மாவட்டங்களில் கிளைகளை அமைத்து சிறப்பாகச் செயலாற்றி வருகிறது.

இன்று மாதம் ஒன்றுக்கு சுமார் 500 கார்களுக்கு மேல் விற்பனையை எட்டியுள்ளது. மாருதியின் இந்தியாவிலேயே முதல் பிளாட்டின டீலர் என்ற பெருமையை அம்பாள் ஆட்டோ நிறுவனம் பெற்றுள்ளது. இன்று சுமார் 700 பேர் அம்பாள் குழுமத்தில் பணியாற்றி வருகிறார்கள்.

இதற்கெல்லாம் மகுடம் சூட்டுவது போல மாருதியிடம் இந்தியாவில் நான்கு முறை பிளாட்டினம் விருதைப்பெற்ற ஒரே நிறுவனம் என்ற பெருமையை அம்பாள்

ஆட்டோ பெற்றுள்ளது. இன்று சுமார் 700 பேர் அம்பாள் ஆட்டோ குழுமத்தில் பணியாற்றி வருகிறார்கள்.

கன்னந்த குலத்தைச் சேர்ந்த திரு. அசோகன் அவர்கள் 1988 ம் ஆண்டு திருமதி. சந்தனாசெல்வி அவர்களை திருமணம் செய்துக்கொண்டார். இவர்களுக்கு திரு. அனீஷ் முத்துசாமி என்ற மகன் உள்ளார். அவர் தற்போது கோவை P.S.G.கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பொறியியல் படித்து வருகிறார்.

திரு. அசோகன் அவர்களின் சாதனைகளைப் பாராட்டி ஊட்டி அரிமா சங்கம் இவருக்கு “வாழ்நாள் சாதனையாளர்” விருதை வழங்கி கௌரவித்துள்ளது.


சமூக சேவையில் ஆர்வமுள்ள இவர், மலைவாழ் மக்கள், மற்றும் கிராமப்புற ஏழை மாணவர்கள் பயிலும் அரசுப் பள்ளிகளில் வகுப்பறை மற்றும் பள்ளிகளுக்கு தேவையான இதர வசதிகளை வருடந்தோறும் செய்து வருகிறார். அதற்காக ACME ரவுண்டேபிள் அமைப்பு இவருக்கு கல்வியின் மூலம் சுதந்திரத்திற்கான (Freedom Through Education) விருதை வழங்கி சிறப்பித்துள்ளது.

வாடிக்கையாளர்களுக்கு தரமான சேவையை வழங்கியதன் மூலம் கோவை பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதாக வளர்ந்துள்ள அம்பாள் ஆட்டோ நிறுவனத்தை, திரு. அசோகன் அவர்கள் கடின உழைப்பாலும், திட்டமிட்ட செயல்பட்டாலும் உருவாக்கியுள்ளார்கள்.

சிறந்த தொழில் அதிபராக விளங்கிவரும் திரு.அசோகன் அவர்களின் தலைமையில் அம்பாள் ஆட்டோ நிறுவனம் மென்மேலும் வளர்ந்து புதிய சாதனைகளைப் படைக்க வாழ்த்தி, கொங்கு நண்பர்கள் சங்கம் அவருக்கு “கொங்கு சாதனையாளர்” விருதை வழங்கி கௌரவிக்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## பி.வி.கல்யாண சுந்தரம்

ராசிபுரம் வட்டம், பட்டணம் கிராமம், ராசிபுரம் கொங்கு நாட்டு வேளாளர் அறக்கட்டளையின் தற்போதைய தலைவர் திரு. P.S.வேலப்பன், திருமதி. அத்தாயி ஆகியோரின் மகன், திரு. P.V.கல்யாண சுந்தரம். இவர் கண்ணன் குலத்தைச் சார்ந்தவர். இவரின் மனைவி திருமதி. எஸ்.அருள்ஜோதி, இவர்களுக்கு கே.வருண் என்ற மகன் உள்ளார்.

ராசிபுரம், திருவள்ளுவர் கலைக்கல்லூரியில் பி.எஸ்.சி. (இயற்பியல்) பட்டம் பயின்றார். பின்னர் 1992 ம் ஆண்டு தொலைக்காட்சி உதிரிபாகங்களை ஒருங்கினைத்து பாலிமர் என்ற பெயரில் தொலைக்காட்சியை உருவாக்கி விற்பனை செய்து வந்தார். இவரது தயாரிப்பு சேலம் பகுதியில் மிகுந்த வரவேற்பை பெற்றிருந்தது.

1994-ல் டிஸ் ஆண்டனா மற்றும் ரிசீவர் கருவிகளை தயாரிப்பதில் ஈடுபட்டார்.

1997–ம் ஆண்டில் சிறிய அளவில் கேபிள் டிவி தொழிலை ஆரம்பித்து படிப்படியாக விரிவாக்கம் செய்து சேலம் மாவட்டம் முழுவதும் பாலிமர் டிவி என்ற கேபிள் டிவி சேவையை விரிவாக்கம் செய்தார்.

1999–ம் ஆண்டு “பாலிமர்” என்ற பெயரில் கேபிள் சேனல் ஒன்றை ஆரம்பித்து நடத்தினார். இதன் சேவையை ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணங்கிரி, நாமக்கல், கோவை

மற்றும் பிற மாவட்டங்களில் வெற்றிகரமாக விரிவாக்கம் செய்து தமிழகத்தின் இரண்டாவது பெரிய கேபிள் சேனல் என்ற சிறப்பைப் பெற்றார்.


தொழில் சம்பந்தமாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, அரபு நாடுகள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

"மாறினால் மட்டுமே முன்னேற்றம்" என்பதை நன்கு உணர்ந்த இவர் தனது துறையில் நாளும் வளரும் தொழில் நுட்பங்களுக்கு ஏற்ப தனது தொழிலை மாற்றி முன்னேற்றப் பாதையில் பயணம் செய்து வருகிறார்.

இதற்கெல்லாம் மகுடம் சூட்டுவது போல "பாலிமர் டிவி" என்ற பெயரில் (Satelite Channel) துணைக்கோள் அலைவரிசை ஒன்றை விரைவில் துவங்க உள்ளார்.

ஊடகத் துறையில் மாபெரும் சாதனை படைத்துள்ள இந்த இளம் தொழில் அதிபரின் சாதனைகளைப் பாராட்டி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு சாதனையாளர்" விருதை வழங்கி மேன்மேலும் இவரது சாதனைகள் தொடர வாழ்த்துகிறது.

❖❖❖❖❖



# கொங்கு சாதனையாளர்



## பையா கவுண்டர் (எ) ஆர்.கிருஷ்ணன்

கோவை மாவட்டம், காளப்பட்டியில் திரு. ராயக்கவுண்டர் திருமதி பூவாத்தாள் தம்பதியருக்கு சேரன் கூட்டத்தில் 1959 ம் ஆண்டு பிறந்தார் திரு. ஆர். கிருஷ்ணன்.

பையாக் கவுண்டர் என அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் இவர், 2001 அக்டோபர் மாதம் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் வெற்றிபெற்று காளப்பட்டி பேரூராட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். காளப்பட்டி பேரூராட்சியின் எல்லைக்குள் எந்தப்பிரட்சனையாக இருந்தாலும், நேரில் சென்று மக்களோடு பேசி அதை நல்ல முறையில் தீர்த்து வருகிறார்.

காளப்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியை, அரசு மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்துவதற்கு தமிழக அரசிடம் அனுமதி பெறுவதற்கு உதவியாக இருந்தவர்.

காளப்பட்டி நான்குமுனை சந்திப்பில் பல ஆண்டுகளாக இருந்த ஆக்கிரமிப்பை அனைத்துக்கட்சி நண்பர்களுடனும் பேசி, ஆக்கிரமிப்பை அகற்றி அழகான, விரிவான சந்திப்பை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

பேரூராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் இருந்து வரும் இருதய நோயாளிகளுக்கு தனது சொந்த நிதியில் இருந்து ரூ. 5,000/- வழங்கி வருகிறார்.

காளப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள பழமையான பெருமாள் கோவிலை

புதுப்பித்துள்ளார். பொது மக்களின் உதவியோடு இவர் தலைமையில் சித்ரா அருகில் ஓர் மாரியம்மன் கோவில் உருவாகி வருகிறது.

2001 - 2006 ம் ஆண்டுகளில் பேரூராட்சி தலைவராக சிறப்பாக பணியாற்றிய திரு. பையாக்கவுண்டர் அவர்கள் மக்களோடு மக்களாகப் பழகி அனைவரின் அன்பையும் பெற்றார்.

2006-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற உள்ளாட்சித்தேர்தலில் மக்கள் கூட்டணி என்ற பெயரில் காளப்பட்டி பேரூராட்சியின் 15 வார்டுகளிலும் சுயேட்சையாக இவர் தலைமையில் போட்டியிட்ட 14 பேர் வெற்றிவாகை சூடினர். 2006 ல் இவர் மீண்டும் காளப்பட்டி பேரூராட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.


தமிழகத்தில்2006 ல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் சுயேட்சையாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே பேரூராட்சி தலைவர் திரு.பையாக்கவுண்டர் அவர்கள். மற்ற அனைத்து பேரூராட்சி தலைவர்களும் அரசியல் கட்சி சார்ந்தவர்கள், கூட்டணி மூலம் வெற்றி பெற்றவர்கள்.

இவரது சாதனைகளுக்கு மனைவி திருமதி. வசந்தாமணி அவர்கள் உறுதுணையாக இருந்து வருகிறார். இவரும் காளப்பட்டி 15வது வார்டின் பேரூராட்சி மன்ற உறுப்பினர் ஆவார். இவர்களுடைய மூத்த மகள் திருமதி. சசிகலா, மருமகன் திரு. பூர்ண சந்திரன், இளைய மகள் திருமதி. பூர்ணிமா, மருமகன் திரு.செந்தில் குமார் ஆவார்.

தனது அன்பாலும், சிறந்த தலைமைப் பண்பாலும் காளப்பட்டி பேரூராட்சியின் தலைவராக சிறப்பாகப் பணியாற்றி நமது கொங்கு சமுதாயத்திற்கு பெருமை சேர்த்துவரும் திரு. பையாக்கவுண்டர் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கி சிறப்பிக்கிறது.

❖❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## வெ.மு.சிவநேசன்

திரு.வெ.மு.சிவநேசன் அவர்கள் 14-10-1932 இல் நாமக்கல் மாவட்டம் முத்தம்மா பட்டியில் வெள்ளையக்கவுண்டர் - செல்லம்மாள் தம்பதியினருக்கு மகனாகப்பிறந்தார் பெருங்குடி கூட்டத்தைச் சேர்ந்த இவரின் மனைவி காளியம்மாள்.

இவர்களுக்கு 2 மகன்களும், 2 மகள்களும் உள்ளனர். இவர் 1952 இல் மலேசியாவிற்கு சென்றார். அங்கு 1956 இல் நாமக்கல் தாலுக்கா நலன் அபிவிருத்தி சங்கத்தை தோற்றுவித்தவர்களுள் இவரும் ஒருவர். சங்கத்தில் இணைந்து செயலாளராகவும் பின் பொருளாளராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். 1981 இல் செயலாளராக பொறுப்பேற்றார். 1986 முதல் 1991 வரை இரவு பகல் பாராமல், தன்னலம் கருதாமல் மன்றத்தை நடத்தி வந்தார்.

அதனால் 1992 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை மன்றத்தின் ஆயுள்காலத் தலைவராகவும் ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறார். இவர் தொண்டினைப்பாராட்டி 1993 இல் நெகிரி செம்பிலான் மாநில ஆட்சியாளரால் விருது வழங்கிப்பாராட்டப்பட்டார்

நாடு கடந்து சென்றாலும் தன் இனமக்களின் நன்மை கருதித் தொண்டு செய்த அன்னாரை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பாராட்டி “கொங்கு சாதனையாளர்” விருதை வழங்கி கௌரவிக்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## குப்பானூர் பி.சிவானந்தம்

சேலம் மாவட்டம் சங்ககிரி அருகில் குப்பானூர் என்ற குக்கிராமம். உழைப்பையே மூலதனமாக கொண்ட திரு. பழனிவேல் கவுண்டருக்கு கடைக்குட்டியாக 27-1-1940 பிறந்தவர்தான், நமது சாதனையாளர் திரு. குப்பானூர் பழனிவேல் சிவானந்தம். சங்ககிரி துர்கத்தில் இளம் வயதில் பள்ளிப்படிப்பை முடித்தார். பின் ஈரோடு சிக்கய நாய்க்கர் கல்லூரியில் P.U.C படிப்பை மேற்கொண்டார். பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் சிறந்த மாணவனாக தேர்வு பெற்றார்.

ஆறு பொறியியல் கல்லூரிகளே இருந்த அந்த காலத்தில் கோவை P.S.G.பொறியியல் கல்லூரியில் சேர அவர் தேர்வு பெற்றதே இவரது சாதனைகளுக்கு முதல் சான்று. பொறியியல் பட்டதாரியாக அவராதம் எடுத்த நமது கொங்கு சொந்தம் அமெரிக்கா என்றால் என்ன என்று எண்ணியிருந்த அக்காலத்தில் 1967 ஆம் ஆண்டு மேற்படிப்பிற்காக அமெரிக்கா சென்றது அவரது தொடர் சாதனையின் அடுத்த சான்று. அண்ணார் அவர்கள் 1971 ஆம் ஆண்டு Dr. A.ஈஸ்வரி அவர்களை மணம்முடித்தார். தம்பதியினர் அமெரிக்க மண்ணில் அன்று முதல் இன்று வரை தங்களது வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்து வெற்றிநடைபோட்டுக் கொண்டுள்ளார்கள். வெற்றி வாழ்க்கை பயணத்தில் கிடைத்த மாணிக்க மணிகள் தான் சீதா, சித்ரா என்ற இரண்டு பெண் குழந்தைகள். பொறியாளராக பல சாதனைகள் படைத்துள்ளார்.


அமெரிக்காவில் இவர் வாழும் பகுதிக்கு செல்லும் நமது கொங்கு சொந்தங்களுக்கு நமது சாதனை செம்மல் திரு. சிவானந்தம், Dr. ஈஸ்வரி தம்பதியினரின் அன்பும் அரவணைப்பும் நமது சொந்தங்கள் நாம் வந்திருப்பது அண்ணிய மண்ணா அல்லது நமது பிறந்த இடமா என்ற சந்தேகம் எழும் அளவிற்கு இருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. அமெரிக்காவில் கொங்கு நற்பணி மன்ற நிறுவன உறுப்பினர்களில் முக்கியமானவராக இருந்து வருகிறார்.

நமது சமுதாய முன்னோடிகள், பெற்றோர்கள், மாணவ மாணவியர் என்று அனைத்துப்பிரிவினருக்கும் தம்பதியினரின் அரவணைப்பு அளவிட முடியாததாக உள்ளது. அருட்செல்வர் மகாலிங்கம் ஐயா, மதிப்பிற்குரிய பண்ணாரி அம்மன் குழுமத் தலைவர் S.V.பாலசுப்ரமண்யம், கவிஞர் கண்ணதாசன், திருப்பூர் திரு.வேலப்பன் போன்ற பல ஆன்றோர், சான்றோர்கள் சிவானந்தம் தம்பதியரின் அன்பு உபசரிப்பை ஏற்றவர்கள் என்பதிலிருந்தே, அவருடைய சமுதாயப்பற்று வெளிப்படையாகத் தெரிகிறது.

எளிமை, சிறந்த செயல்பாடு, அன்பு, அரவணைப்பு, விருந்தோம்பல், சமுதாய மக்களுக்கு உதவி புரிதல் போன்ற மிக உயரிய பண்புகளுக்கு உரியவரான சாதனையாளர் பொறியாளர் திரு. சிவானந்தம் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருதை வழங்கி சிறப்பிக்கிறது.

❖❖❖❖

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## எஸ்.சி. சின்னசாமி

திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் சந்தையப்பாளையத்தில் 1-7-1943 ம் நாள் S.P.சென்னியப்ப கவுண்டர் கருப்பாயம்மாள் தம்பதிகளுக்கு முதல் மகனாய் எளிய குடும்பத்தில் பிறந்தவர் திரு. எஸ்.சி.சின்னசாமி அவர்கள்.

7ம் வகுப்பு வரை திண்ணைப்பள்ளியில் படித்த இவர். தனது 17 வது வயதில் குன்னத்தூரில் அமைந்திருந்த ஸ்ரீ நடராஜா ஒர்க்ஷாப்பில் உதவியாளராக வேலைக்கு சேர்ந்தார். படிப்படியாக தொழிலைக்கற்று 1964ம் ஆண்டு ஸ்ரீ ஆண்டவர் ஒர்க்ஷாப் என்னும் பெயரில் சிறிய தொழிலகத்தை தொடங்கி அதில் தானே கிணற்று மோட்டார்களுக்கு காயில் கட்டும் தொழிலை செய்து வந்தார். ஒரு லேத் மெஷினை வாங்கி அதில் டிராக்டர் மற்றும் ரிக் உதிரி பாகங்களை தயார் செய்து தனி நபராகவே கொண்டு சென்று விற்று வந்தார். பொருளின் தரத்தால் வியாபாரம் பெருகவே உதிரி பாகங்களை அதிகஅளவில் உற்பத்தி செய்து இந்தியா முழுவதும் விற்பனை செய்தும் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்து வருகிறார்.

ஆதி குன்னத்தூர் நலச்சங்கம் என்ற சங்கத்தை ஏற்படுத்தி அதன் தலைவராக இருந்து பல நற்பணிகளை செய்து வருகிறார். குஜராத் பூகம்பத்தின்போதும், சுனாமி ஏற்பட்டபோதும் குன்னத்தூர் நலச்சங்கத்தின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளைக்கொண்டு சேர்த்தார். மேலும் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஏற்படவும், ஸ்ரீ பொங்காளியம்மன் கோவிலை புதுப்பித்து சிறப்பு வாய்ந்த கோவிலாக உருவாக்கவும் பாடுபட்டு வருகிறார்.

சிறந்த ஆன்மீக வாதியான இவர்குன்னத்தூர் மற்றும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களில் நடைபெறும் ஆலய திருப்பணிகளுக்கு தன்னால் இயன்ற உதவியை செய்து வருகிறார். தமிழக அரசு இவரை குன்னத்தூர்குன்றீஸ்வரர் திருக்கோவில் மற்றும் அங்காளம்மன் திருக்கோவில் அறங்காவலர் குழு உறுப்பினராக நியமித்துள்ளது.

தன்னுடைய சொந்தக் கட்டிடத்தில் கொங்கு வேளாளர் மெட்ரிக் பள்ளியை தொடங்கி அதனை மேனிலைப்பள்ளியாக உயர்த்தி அதன் தலைவராகவும் உள்ளார். குன்னத்தூரில் கொங்கு வேளாளக்கவுண்டர்கள் பேரவை அமைய முன்னின்று ஏற்பாடுகள் செய்து கொங்கு சமுதாயம் மேம்பட தன்னுடைய நிதி மற்றும் உழைப்பை வழங்கி பாடுபட்டு வருகிறார்.

இவருடைய மனைவி திருமதி. எஸ்.உத்தமி, மகன் திரு. சி.கமல், மருமகள் திருமதி கே.பூங்கோதை கமல், மகள் திருமதி கே.கோமதி குமார், மருமகன் திரு ஏ.எஸ்.குமார் ஆவர்.

**வேளாண்மை :**

வேளாண்மை தொழிலில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் காலை 5 மணிக்கே வேளாண் பணிகளை தொடங்கி விடுவார். வேளாண் மேம்பாட்டிற்காக தனது மதி நுட்பத்தால் நவீன முறையில் ரோட்டவேட்டர் தயார் செய்து அதனை இந்தியா முழுவதும் விற்பனை செய்து வருகிறார். ரிக் தொழிலில் பல நவீன யுக்திகளை கையாண்டு குறைந்த நேரத்தில் போர் போடும் உபகரணங்களை தயாரித்து உள்ளார்.

இதன் மூலம் விவசாய பெருமக்களுக்கு நேரம் மற்றும் உற்பத்திச்செலவை மிச்சப்படுத்த வழிவகை செய்து வேளாண்மை பணிகள் மேம்பட பாடுபட்டு வரும் இவருக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “ கொங்கு வேளாண் சாதனையாளர்” விருது வழங்கி பாராட்டுகிறது.

❖❖❖❖

# கொங்கு வேளாண் சாதனையாளர்



**எஸ். சந்திரசேகர்**

கோவை மாவட்டம், சூலூர் ஒன்றியம் குமாரபாளையம் கிராமத்தில் திரு. ஆர்.சண்முகக்கவுண்டர், திருமதி எஸ்.சுப்புலட்சுமி ஆகியோருக்கு 1967 ம் ஆண்டில் பிறந்தார். இவர் முழுக்காதன் குலத்தைச் சேர்ந்தவர்.

பொள்ளாச்சி N.G.M.கலைக்கல்லூரியில் B.A., வரலாறும், M.A., அரசியல் அறிவியலும் (Political Science) பயின்றார்.


*உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம்*
*தொழுதுண்டு பின் செல்பவர்*

என்று வள்ளுவர் சொன்ன வேளாண் தொழிலின் பெருமையையும் சிறப்பையும் உணர்ந்து வேளாண் தொழிலில் ஈடுபட்டார். இவர் சொட்டு நீர் பாசனம் மூலமும் இயற்கை வேளாண்மை முறையிலும் தென்னை விவசாயம் செய்து அதிக மகசூல் எடுத்து வருகிறார்.

இவருடைய மனைவி பெயர் திருமதி. கௌரிசங்கரி இத்தம்பதியருக்கு எஸ்.பிரியங்கா, எஸ்.ராதிகா, என்ற மகள்கள் உள்ளனர். தென்னை விவாசயத்தில் சாதனை புரிந்துவரும் இவருக்கு கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு வேளாண் சாதனையாளர்" விருது வழங்கிப்பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு இளம் சாதனையாளர்



**பி.ராகுல்**

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம்,. முத்துக்காளி பட்டியைச் சேர்ந்த திரு. பி.பிரபு திருமதி. எஸ்.அமுதா தம்பதியரின் மகன், பண்ணை குலச்செல்வன் பி.ராகுல்.

சென்னை, அடையாரில் உள்ள செயின்ட் பாட்ரிக்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படித்துவருகிறார்.

தாய், தந்தையின் ஊக்குவிப்பால் தனது 7வயது முதல் Gymnastics பயிற்சி செய்து வருகிறார். 2003-ம் ஆண்டில் முதல் தங்கப்பதக்கத்தை வாங்கிய பி.ராகுல் இதுவரை மாநில அளவிளான Gymnastics போட்டிகளில் 30 க்கும் மேற்பட்ட பதக்கங்களை வென்றுள்ளார்.

யானையின் பலம் தும்பிக்கையில் மனிதனின் பலம் நம்பிக்கையில் என்பதை மனதில் கொண்டு கடுமையான பயிற்சி செய்து 2008ம் ஆண்டு திருவனந்தபுரத்தில் நடைபெற்ற தேசிய அளவிளான Gymastics போட்டியில் கலந்துக்கொண்டு வெண்கலப்பதக்கத்தை பெற்றுள்ளார்.

தமிழகத்திலிருந்து Gymnastics ல் தேசிய பதக்கம் வாங்கிய முதல் மாணவர் என்பது நம் கொங்கு சமுதாயத்திற்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

தேசிய அளவில் பதக்கம் பெற்றுள்ள செல்வன் பி.ராகுல் மேலும் பல சாதனைகள் புரிந்திட வாழ்த்தி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் இவருக்கு "கொங்கு இளம் சாதனையாளர்" விருது வழங்கிப்பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு இளம் சாதனையாளர்



**பொன்.விவேகா**

கோவை மாவட்டம், பல்லடம் அருகில் உள்ள கணியூர் கிராமம், திரு.சி.பொன்னுசாமி, திருமதி. க.சகுந்தலா தம்பதியரின் மூத்த மகள் செல்வி. பொன் விவேகா இவர் பெரியன்குலத்தைச் சேர்ந்தவர்.

சிறு வயதிலிருந்தே பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் பட்டிமன்றங்களில் கலந்துகொண்டு பல பரிசுகளைப்பெற்றுள்ளார். பன்னிரண்டாம் வகுப்பு முடித்தவுடன் தந்தையின் ஊக்குவிப்பால் சட்டப்படிப்பைத் தேர்வு செய்தார். 2006-ஆம் ஆண்டு சட்டப்படிப்பிற்கான நுழைவைத் தேர்வில் மாநில அளவில் இரண்டாமிடம் பெற்றார்.

இவர் தற்போது சென்னை, சட்டப்பல்கலைக்கழகத்தில் B.A., B.L., (Hons) 3ம் ஆண்டு பயின்று வருகிறார். பல்கலைக்கழக அளவிலான தேர்வில் முதல் மூன்று இடங்களுக்குள் இருந்து வருகிறார்.


தற்போது சென்னையில் மூத்த வழக்கறிஞர் திருமதி. நளினி சிதம்பரம் அவர்களிடம் பயிற்சி பெற்று வருகிறார். மாநில அளவில் அனைத்துச் சட்டக்கல்லூரிகளும் பங்கு கொள்ளும் மாதிரி நீதிமன்றப் போட்டியில் இரண்டு முறை முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

2009 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் கர்நாடக மாநிலம் பெல்காமில் நடைபெற்ற தேசிய அளவிலான மாதிரி நீதிமன்றப் போட்டியில் (Moot Court Competition) முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

தேசிய அளவில் சாதனை படைத்துள்ள செல்வி பொன். விவேகா, சட்டத்துறையில் மேலும் பல சாதனைகள் புரிந்திட வாழ்த்தி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு இளம் சாதனையாளர்” விருது வழங்கிப் பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு இளம் சாதனையாளர்



**பி.வி.நந்திதா**

சேலம் மாவட்டம், சங்ககிரியைச் சேர்ந்த திரு. எம்.வெங்கடாசலம் திருமதி எம்.சுமதி ஆகியோரின் மகள், கண்ணன் குலச் செல்வி பி.வி.நந்திதா

தற்போது சங்ககிரி, K.R.P.மெட்ரிக் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்து வருகிறார். இவர் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான சதுரங்கப் போட்டிகளில் கலந்துகொண்டு கொங்கு கொடியை நாட்டி வருகிறார்.

1. 2007 ம் ஆண்டு அக்டோபர் மாதம் கேரளா மாநிலம் கோழிக்கோட்டில் நடந்த 11 வயதுக்குட்பட்டவர்களுக்கான தேசிய சதுரங்கப் போட்டியில் தேசிய அளவில் முதலிடம் பெற்றுள்ளார்.
2. 2008-ம் ஆண்டு நடைபெற்ற காமன்வெல்த் சதுரங்கப் போட்டியில் வெண்கலப் பதக்கம் பெற்றுள்ளார்.
3. 2009-ம் ஆண்டு வேலூர் VIT பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தேசிய சதுரங்கப் போட்டியில் 2ம் இடம் பெற்றுள்ளார்.
4. 2009-ம் ஆண்டு ஈரானில் நடைபெற்ற ஆசிய இளைஞர் சதுரங்கப் போட்டி மற்றும் வியட்நாமில் நடைபெற்ற உலக இளைஞர் சதுரங்கப் போட்டிகளில் கலந்துக்கொண்டு 3ம் மற்றும் 5வது இடங்களைப் பெற்றார்.

நமது கொங்கு குலச்செல்வி சதுரங்க விளையாட்டில் வியத்தகு சாதனைகள் செய்து வருவது நமக்கு மகிழ்ச்சியையும், பெருமிதத்தையும் அளிக்கிறது. இவர் உலக அளவில் சாதனைகள் பல படைத்திட வாழ்த்தி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு இளம் சாதனையாளர்” விருது வழங்கிப் பாராட்டுகிறது. சாதனைகளுக்குத் துணைநிற்கும் இவரது பெற்றோர்களையும் சங்கம் பெரிதும் பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு இளம் சாதனையாளர்



**ம.காயத்திரி**

கோவை மாவட்டம் அன்னூர் ஒன்றியம் சொக்கம்பாளையம் கிராமத்தில் திரு.கே.மயில்சாமி – திருமதி எம்.சித்ரா ஆகியோருக்கு இளைய மகளாகப் பிறந்தவர் செல்வி. ம.காயத்ரி.

இவர் தற்போது அன்னூரில் உள்ள தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வருகிறார். செல்வி. காயத்ரி மாவட்ட, மாநில அளவிலான சைக்கிள் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளை வென்றுள்ளார்.

அக்டோபர் 2008 ம் ஆண்டு கர்நாடகாவில் நடந்த தேசிய அளவிளான 15 கி.மீ. தூரம் செல்லும் சைக்கிள் போட்டியில் கலந்து கொண்டு மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.


அதேபோல புனே நகரில் நடைபெற்ற (SCFI - School Federation of India) நடத்திய பள்ளி மாணவர்களுக்கிடையேயான சைக்கிள் போட்டிகளில் கலந்து கொண்டு, 9.4 கி.மீ. செல்லும் பலர் கலந்துகொள்ளும் (Mass Start) போட்டியில் தேசிய அளவில் முதலிடத்தையும், 4.2 கி.மீ. செல்லும் தனிப்பட்ட நபருக்கான போட்டியில் தேசிய அளவில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெற்றோரின் ஊக்கம், கடுமையான பயிற்சி ஆகியவற்றோடு விளையாட்டுத்துறையில் இந்த இளம் வயதில் தேசிய அளவிளான சாதனைகளைப் புரிந்து நமது கொங்கு இனத்திற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்துவரும் ஆந்தைகுல செல்வி. ம.காயத்திரிக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு இளம் சாதனையாளர்” விருது வழங்கிப் பாராட்டுகிறது.

இனிவரும் போட்டிகளிலும் வெற்றி பெற்று சாதனைகள் படைக்க சங்கம் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு இளம் சாதனையாளர்



## எம்.ஜெயந்த் ஜெயராமன்

நாமக்கல் Dr. J.மோகன், திருமதி உஷா மோகன் ஆகியோரின் அன்பு மகன், ஆந்தை குலச்செல்வன் எம்.ஜெயந்த் ஜெயராமன்.

தற்போது கரூர், ஜெயராம் வித்யா பவன் மெட்ரிக் பள்ளியில் 8 ம் வகுப்பு பயின்று வருகிறார். இவர் மாநில அளவிளான டென்னிஸ் போட்டிகளில் பங்குபெற்று பல பரிசுகளைப் பெற்றுள்ளார்.

1. 2008-ம் ஆண்டு திருவனந்தபுரத்தில் நடைபெற்ற AITA 12 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் தேசிய அளவில் முதலிடம்.
2. 2008ம் ஆண்டு மே மாதம் பெங்களூரில் நடைபெற்ற தேசிய அளவிளான டென்னிஸ் போட்டியில் முதலிடம்
3. 2008 அக்டோபர் மாதம் டெல்லியில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சாதனைகளால் தமிழகத்திற்கும், கொங்கு சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்துள்ள செல்வன் எம்.ஜெயந்த் ஜெயராமனைப்பாராட்டி, இவர் உலக அளவில் மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்தி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு இளம் சாதனையாளர்” விருது வழங்கிப் பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு இளம் சாதனையாளர்



## ரோமா சந்திரன்

திருச்செங்கோடு பகுதியைச்சேர்ந்த திரு. கே.எம்.சந்திரன் - திருமதி கே.பாமா தம்பதியரின் இளைய மகள். சேரன்குலச்செல்வி ரோமா. தனது 7வது வயது முதல் டென்னிஸ் விளையாடிவரும் செல்வி ரோமா, மாநில அளவிலும், தேசிய அளவிலும் பல பரிசுகளை வென்றுள்ளார்.

2008ம் ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிகளில் ஒற்றையர், மற்றும் இரட்டையர் பிரிவில் விளையாடி இரண்டு போட்டிகளிலும் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் புனே நகரில் நடைபெற்ற 14 வயதுக்கு உட்பட்டவர்களுக்கிடையேயான ஆசிய அளவிளான டென்னிஸ் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார்.

**தரவரிசைப்பட்டியல்** :-

| | | |
|---|---|---|
| ஆசிய அளவில் | 14 வயதுக்கு உட்பட்டவர்களில் | 22ம் இடம் |
| தேசிய அளவில் | 12 வயதுக்கு உட்பட்டவர்களில் | முதல் இடம் |
| தேசிய அளவில் | 14 வயதுக்கு உட்பட்டவர்களில் | 13வது இடம் |

அவரது சாதனையைப்பாராட்டி, உலகளவில் நடைபெறும் போட்டிகளில் வென்று தமிழகத்திற்கும் கொங்கு சமுதாயத்திற்கும் பெருமை சேர்க்க வாழ்த்தி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு இளம் சாதனையாளர்” விருது வழங்கிப் பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு இளம் சாதனையாளர்



**எஸ்.சுஜிதா**

கோவை மாவட்டம், ராமநாதபுரம் திரு. எம்.செந்தில் குமார், திருமதி எஸ்.இந்திராணி தம்பதியரின் மகள் செல்வி எஸ்.சுஜிதா. இவர் செம்பூத்தன் குலத்தைச் சேர்ந்தவர்.

இவர் கராத்தே மற்றும் ஜீடோ கலைகளில் 15 வயதிற்குட்பட்ட மகளிர் பிரிவில் சர்வதேச அளவில் இலங்கையில் நடைபெற்ற போட்டியில் கட்டா பிரிவில் முதல் இடத்திலும், குமுத்தே பிரிவில் 2ம் இடத்திலும் வெற்றி பெற்றுள்ளார். அதே போல் சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச போட்டியிலும் கட்டா பிரிவில் முதல் இடத்திலும், குமுத்தே பிரிவில் இரண்டாம் இடத்திலும் வெற்றி பெற்றுள்ளார். மேலும் வருகின்ற ஆகஸ்ட் 2009ல் 150 நாடுகள் பங்கு பெறும் சர்வதேச கராத்தே போட்டி சீனாவில் நடைபெற உள்ளது. இவர் இப்போட்டியில் கலந்து கொள்ள தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதை தவிர இவர் தேசிய அளவிலும் மாநில அளவிலும் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றதோடு, பரிசுகளையும் பதக்கங்களையும் குவித்துள்ளார்.

இவர் கோவை பீளமேடு பி.எஸ்.ஜி.சர்வஜன மேல்நிலைப்பள்ளியில் +1 படித்து வருகிறார்.

கொங்கு குலப்பெண்மணிகள் விளையாட்டுத்துறையிலும் வியத்தகு சாதனைகள் செய்து வருவது மகிழ்ச்சியை அளிக்கிறது. இவரது சாதனை உலக அளவில் விரிய வாழ்த்தி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு இளம் சாதனையாளர்" விருது வழங்கிப் பாராட்டுகிறது.

❖❖❖❖❖

## 2009 ஆம் ஆண்டு 10–ஆம் வகுப்பு அரசு தேர்வில் முதல் மூன்று இடங்களைப்பெற்றவர்கள்

### முதல் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | R.அபிநயா |
| த/பெ | : | M.ராமலிங்கம் |
| ஊர் | : | P. சத்திரம், கரூர் |
| பள்ளி | : | குறிஞ்சி மேல்நிலைப்பள்ளி, காவெட்டிபட்டி, கரூர் |
| மதிப்பெண் | : | 495/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநில அளவில் 2ம் இடம் |

### இரண்டாம் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | R.விமல் |
| த/பெ | : | P.ராஜேந்திரன் |
| ஊர் | : | செங்குந்தபுரம், கரூர் |
| பள்ளி | : | P.A.வித்யா பவன் மேல்நிலைப்பள்ளி கரூர் |
| மதிப்பெண் | : | 494/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநில அளவில் 3ம் இடம் |

### மூன்றாம் இடம்


| | | |
|---|---|---|
| பெயர் | : | M.சுவாதிகா |
| த/பெ | : | L.முருகவேல் |
| ஊர் | : | அரவை, கரூர் |
| பள்ளி | : | P.A.வித்யா பவன் மேல்நிலைப்பள்ளி கரூர் |
| மதிப்பெண் | : | 493/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநில பாடத்தில் மாநில அளவில் முதலிடம் |

**2009 ம் ஆண்டில் நடைபெற்ற 10 ம் வகுப்பு அரசுப்பொதுத்தேர்வில் கலந்துகொண்டு கொங்கு**


இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப்பாராட்டி சங்கம் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

# 2009 ஆம் ஆண்டு 12–ஆம் வகுப்பு அரசு தேர்வில் முதல் மூன்று இடங்களைப்பெற்றவர்கள்

## முதல் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | A.பிரவீன் |
| த/பெ | : | P.ஆறுமுகம் |
| ஊர் | : | செங்குந்தபுரம், கரூர் |
| பள்ளி | : | சேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கரூர் |
| மதிப்பெண் | : | 1183/1200 |
| சிறப்புத் தகுதி | : | மாநில அளவில் முதலிடம் |



| | | |
|---|---|---|
| பெயர் | : | M.லிங்கேஷ்வரன் |
| த/பெ | : | P.முருகசாமி |
| ஊர் | : | பொன்முடி, விஜயமங்களம் |
| பள்ளி | : | பாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, விஜயமங்கலம் |
| மதிப்பெண் | : | 1183/1200 |
| சிறப்புத் தகுதி | : | மாநில அளவில் முதலிடம் |

## இரண்டாம் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | T.கீர்த்தனா |
| த/பெ | : | R.தச்சிணாமூர்த்தி |
| ஊர் | : | பாசூர், ஈரோடு |
| பள்ளி | : | SRVG மேல்நிலைப்பள்ளி ராசிபுரம் |
| மதிப்பெண் | : | 1176/1200 |

## மூன்றாம் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | N.தேவசேனா |
| த/பெ | : | P.நாச்சிமுத்து |
| ஊர் | : | செங்கப்பள்ளி, பரமத்தி வேலூர் |
| பள்ளி | : | கொங்கு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, பரமத்தி வேலூர் |
| மதிப்பெண் | : | 1175/1200 |
| சிறப்புத் தகுதி | : | மருத்துவப்படிப்பிற்கான கட் ஆப் 200/200 |

**2009 ம் ஆண்டில் நடைபெற்ற 12 ம் வகுப்பு அரசுப்பொதுத்தேர்வில் கலந்துகொண்டு கொங்கு இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப்பாராட்டி சங்கம் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.**

## சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

**19–07–2009** அன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 1. | Ball Throw (Boys)<br>III & IV Std. | I பிரதீப் பாலசுப்பிரமணியம்<br>II பிரனேஸ் முத்துச்செல்வன்<br>III எஸ்.எஸ்.சந்திரன் |
| 2. | Ball Throw (Boys)<br>V & VI Std. | I பி.முத்துக்குமார்<br>II எஸ்.பி.அபிக்கண்ணன்<br>III எஸ்.சனோஜ் |
| 3 | Ball Throw (Boys)<br>VII & VIII Std. | I எஸ்.சிவசூர்யா<br>II எஸ்.திலக்<br>III கே.ஆர்.தினேஷ்குமார் |
| 4 | Ball Throw (Boys)<br>IX & X Std. | I சி.கதிரவன்<br>II எஸ்.பிரேம்நாத்<br>III எஸ்.பி.சிபி |
| 5 | Shotput (Boys)<br>XI - 20 Years | I ரகுசாந்த்<br>II சூர்யா<br>III எம்.குஷிக் |
| 6 | Shotput (Boys)<br>21 to 30 Years | I டி.சரவணன்<br>II தங்கவேல்<br>III அருன்ராஜ் |
| 7 | Shotput (Men)<br>31 to 40 Years | I மயில்வாகனன்<br>II தர்மராஜ்<br>III ஆர்.கணேஷ் |
| 8 | Shotput (Men)<br>41 to 50 Years | I எஸ்.ஆர்.ரவிச்சந்திரன்<br>II ஆர்.கே.பாலன்<br>III பி.வெங்கடேசன் |

| | | | |
|---|---|---|---|
| 9 | Shotput (Men)<br>51 to 60 Years | I<br>II<br>III | கே.ராஜாமணி<br>சதாசிவம்<br>எஸ்.ஆர்.சுப்பிரமணியம் |
| 10 | Shotput (Men)<br>61 and above | I<br>II<br>III | பழனியாண்டி<br>பழனிச்சாமி<br>பி.பெரியசாமி |
| 11 | Lucky Corner (Men) | I<br>II<br>III | சாமிநாதன்<br>ஜி.கதிர்வேல்<br>எஸ்.பழனிவேல் |
| 12 | Running Race (Boys)<br>LKG & UKG 25 Metres. | I<br>II<br>III | எஸ்.சர்வேஷ்<br>எம்.அதீஸ்<br>அனுரித்<br>ஆர்.அருண்<br>அதியன் |
| 13 | Running Race<br>I & II Std. (Boys) 25 Metres | I<br>II<br>III | எஸ்.சுந்தர்<br>ஆர்.அன்வதிர்ஷ்<br>டி.எம்.இளவரசன் |
| | | பி.என்.சஞ்ஜீவ் | |
| 14 | Running Race<br>50 Metres (Boys)<br>III & IV Std. | I<br>II<br>III | பி.பிரதீப்<br>கே.ஆர்.சரண்<br>எஸ்.எஸ்.ஸ்ரீராம் |
| 15 | Running Race<br>75 Metres (Boys)<br>V & VI Std. | I<br>II<br>III | எஸ்.சனோஜ்<br>எஸ்.பி.அபிகண்ணன்<br>பி.மிதுன் |
| 16 | Running Race<br>200 Metres (Boys)<br>VII & VIII Std. | I<br>II<br>III | எஸ்.ஜி.முரளி<br>எஸ்.சிவசூர்யா<br>சி.எஸ்.ராஜஸ்ரீபதி |
| 17 | Running Race<br>400 Metres (Boys)<br>IX & X Std. | I<br>II<br>III | எஸ்.பிரேமானந்<br>எம்.பிரபு<br>எஸ்.பிசிபி |

| | | | |
|---|---|---|---|
| 18 | Running Race<br>200 Metres (Boys)<br>16 to 20 Years | I<br>II<br>III | ஆர்.சூரியநாதன்<br>என்.கவி<br>கே.ஜவகர் |
| 19 | Running Race<br>200 Metres (Boys)<br>21 to 30 years | I<br>II<br>III | கே.பி.கடேஸ்வரன்<br>என்.வெங்கடேஷ்<br>ஜி.எஸ்.தங்கவேலு |
| 20 | Running Race<br>100 Metres (Men)<br>31 to 40 years | I<br>II<br>III | வி.தளபதி<br>எஸ்.சரவணன்<br>ஆர்.முத்துசாமி |
| 21 | Running Race<br>100 Metres (Men)<br>41 to 50 years | I<br>II<br>III | எஸ்.ஆர்.ரவிச்சந்திரன்<br>முருகவேல்<br>கே.பி.சுப்பிரமணியம் |
| 22 | Running Race<br>100 Metres (Men)<br>51 to 60 years | I<br>II<br>III | பி.சதாசிவம்<br>ஜி.மணி<br>எம்.ஜி.கணேசன் |
| 23 | Circket Stamping (Men) | I<br>II<br>III | ரமேஷ்<br>தாமோதரன்<br>கே.ஆர்.ஏ.முத்துக்கிருஷ்ணன் |
| 24 | Ball Throw (Girls)<br>III & IV Std. | I<br>II<br>III | ரபியா<br>கீர்த்தனா<br>ஸ்ரீஅபிதா |
| 25 | Ball Throw (Girls)<br>V & VI Std. | I<br>II<br>III | அக்ஷயா<br>ஸ்ரீமதுமதி<br>லக்ஷனா |
| 26 | Ball Throw (Girls)<br>VII & VIII Std. | I<br>II<br>III | ஞானதீபிகா<br>வினிஷா<br>அனு |
| 27 | Ball Throw (Girls)<br>IX & X Std. | I | பிரியங்கா |

| | | | |
|---|---|---|---|
| 28 | Ball Throw (Girls)<br>16 to 20 years | I | ஜீவசத்தியா |
| | | II | ரோஷினி |
| | | III | பத்மபிரியா |
| | | III | செல்லகிருத்திகா |
| 29 | Ball Throw (Girls)<br>21 to 30 years | I | அணிதா |
| | | II | கீதா |
| | | III | புவனா |
| 30 | Ball Throw (Women)<br>31 to 40 years | I | டி.சாந்தாமணி |
| | | II | பி.சுமதி |
| | | III | சாவித்திரி சீனிவாசன் |
| 31 | Ball Throw (Women)<br>41 to 50 years | I | திலகவதி |
| | | II | கலைச்செல்வி |
| | | III | ஜெயமணி |
| 32 | Ball Throw (Women)<br>51 to 60 years | I | வசந்தி |
| | | II | மணிமேகலை புஷ்பராஜ் |
| | | III | பழனியம்மாள் |
| 33 | Ball Throw (Women)<br>61 and above | I | ஏ.சிவகாமி |
| | | II | கே.ரம்யா |
| | | III | சி.சாரதாமணி |
| 34 | Lucky Corner (Ladies)<br>above 18 years | I | திலகா |
| | | II | தமிழ்ச்செல்வி |
| | | III | காந்திமதி ரமேஷ் |
| 35 | Running Race (Girls)<br>25 Metres<br>LKG & UKG | I | எம்.அனுக்ஷா |
| | | II | நிதுல்லா |
| | | III | மிர்துலா |
| 36 | Ball Throw (Girls)<br>25 Metres<br>I & II Std | I | ஆர்.நிக்கிலா |
| | | II | இ.ஐஸ்வர்யா |
| | | III | எஸ்.என்.வேதிகா |

| | | | |
|---|---|---|---|
| 37 | Ball Throw (Girls)<br>50 Metres<br>III & IV Std | I<br>II<br>III | கே.கீர்த்தனா<br>ஆர்.அனுக்ஷா<br>அனுராதா ஆனந்த் |
| 38 | Ball Throw (Girls)<br>50 Metres<br>V & VI Std | I<br>II<br>III | எஸ்.அக்ஷயா<br>எஸ்.கீர்த்திகா<br>எஸ்.ஸ்ரீமதுமிதா |
| 39 | Ball Throw (Girls)<br>75 Metres<br>VII & VIII Std | I<br>II<br>III | அமுதனி<br>வினிஷா<br>வி.லத்திகா<br>ஆர்.மதுமிதா |
| 40 | Ball Throw (Girls)<br>100 Metres<br>XI & 20 years | I<br>II<br>III | எஸ்.பத்மபிரியா<br>எஸ்.சுமிதா<br>ஆர்.செல்லகிருத்திகா |
| 41 | Ball Throw (Girls)<br>100 Metres<br>21 & 30 years | I<br>II<br>III | எம்.பூர்ணிமாதேவி<br>கீதா செந்தில்குமார்<br>பி.ஜமுனா |
| 42 | Running Race (Women)<br>100 Metres<br>31 & 40 years | I<br>II<br>III | கே.சுமதி<br>எஸ்.கற்பகபிரியா<br>பானுமதி |
| 43 | Running Race (Women)<br>100 Metres<br>41 to 50 years | I<br>II<br>III | திலகவதி நடேசன்<br>ராஜகுமாரி கருப்பசாமி<br>தமயந்தி |
| 44 | Running Race (Women)<br>100 Metres<br>51 to 60 years | I<br>II<br>III | கே.வசந்தி<br>அமிர்தா முருகன்<br>பி.பழனியம்மாள் |

❖❖❖❖❖❖